தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 203 ஆனி 14
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, சனி, ஜூன் 28, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**இந்தியா-அமெரிக்கா இடையே விரைவில் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம்: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு**
...2-ம் பக்கம்

**பா.ஜ.க. கூட்டணியில் விஜய் இணைவாரா? அமித்ஷா விளக்கம்**
...3-ம் பக்கம்

**2-வது டெஸ்டில் இருந்து ஜஸ்ப்ரிட் பும்ரா விலகல்? இந்திய அணிக்கு பின்னடைவு**
...6-ம் பக்கம்





● சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.11.15 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தருமபுர ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல தேசிக அடிகளார், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளனர்.

### தரவரிசை பட்டியல் வெளியீடு:

# பொறியியல் கலந்தாய்வு ஜூலை 7-ல் தொடக்கம்

**பொதுப்பிரிவினருக்கு ஜூலை 14 முதல் 17-வரை நடைபெறுகிறது**

சென்னை, ஜூன் 28-

**பொறியியல் படிப்புக்கான தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. சென்னை கிண்டியில் உள்ள மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். மாணவர்கள் https://www.tneaonline.org/ என்ற இணையதளத்தில் தரவரிசை பட்டியலை அறிந்துகொள்ளலாம். பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை 14 தொடங்கி ஆகஸ்ட் 17ம் தேதி வரை நடைபெறுகிறது.**



**2 லட்சம் இடங்கள்...**

தமிழகத்தில் 440-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் என அனைத்து வகை பொறியியல் கல்லூரிகளும் இதில் அடங்கும். இந்தக் கல்லூரிகளில் பி.இ., பி.டெக். படிப்புகளில் ஏறத்தாழ 2 லட்சம் இடங்கள், அரசு ஒதுக்கீட்டு இடங்களாகும்.

**அதிக மாணவர்கள்...**

இந்த இடங்களில் நடப்பு கல்வியாண்டில் (2025-2026) சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பப்பதிவு கடந்த மே 7-ம் தேதி தொடங்கி, கடந்த 6-ம் தேதி முடிவடைந்தது. மொத்தம் 2 லட்சத்து 49 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். அனைவருக்கும் 10 இலக்க எண்கள் கொண்ட ரேண்டம் எண் கடந்த 11-ம் தேதி ஆன்லைன் வாயிலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**தரவரிசைப் பட்டியல்...**

ரேண்டம் எண் ஒதுக்கப்பட்டதை தொடர்ந்து, பொறியியல் சேர்க்கை சேவை மையங்களில் மாணவர்களின் சான்றிதழ்களை ஆன்லைனில் சரிபார்க்கும் பணி கடந்த 10-ம் தேதி தொடங்கி 20-ம் தேதி முடிவடைந்தது. இந்நிலையில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் ஏற்கனவே அறிவித்தபடி, பொறியியல் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் நேற்று (ஜூன் 27) வெளியிடப்பட்டது.

**அமைச்சர் வெளியிட்டார்**

சென்னை கிண்டியில் உள்ள மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். மாணவர்கள் https://www.tneaonline.org/ என்ற இணையதளத்தில் தரவரிசை பட்டியலை அறிந்துகொள்ளலாம். தரவரிசைப் பட்டியலில் 145 பேர் 200-க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ளனர். இவர்களில் 140 பேர் தமிழ்நாடு பாட வாரியத்தின் கீழ் படித்தவர்கள் ஆவர்.

**குறை தீர்க்கும் சேவை**

மேலும், கலந்தாய்வு கால அட்டவணையையும் அமைச்சர் வெளியிட்டார். அதன்படி ஜூலை 7 கலந்தாய்வு தொடங்குகிறது. அன்றைய தினம் சிறப்புப் பிரிவினருக்கும், 14-ம் தேதி பொது

(கடைசி பக்கம் பார்க்க)

### கருணாநிதி நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீடு:

# எழுத்தாளரை போற்றும் சமூகமே உயர்ந்த சமூகம்

**கருணாநிதி நூற்றாண்டு கருத்தரங்கத்தை துவக்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேச்சு**

சென்னை, ஜூன் 28-

**தமிழ்ச் சமூகத்தில் மறைந்த முதல்வர் கருணாநிதியைப் போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும் என்று சாகித்ய அகாடமி மற்றும் ஜே.என்.யு. பல்கலை. தமிழ்த் துறை இணைந்து நடத்திய கருணாநிதி நூற்றாண்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். மேலும் படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும். எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜூன் 27) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சாகித்ய அகாடமி மற்றும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம் சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்தும் கருணாநிதி நூற்றாண்டுக் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இலக்கியத்தின் வழி இந்தியர்கள் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் மகத்தான பணியினை சாகித்ய அகாடமி செய்து வருகிறது.

> “எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும். இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக மக்களின் உயர்வுக்காக அவர்களின் சமூக விடுதலைக்காக முற்போக்குச் சிந்தனைக்காக இயங்கிய, இயங்கும் எழுத்தாளர்களை தமிழ்ச் சமூகம் உச்சி மோந்து கொண்டாட தவறியதே இல்லை.”
> \- முதல்வர் மு.க.ஸ்டாலின்

ஒருவரின் இலக்கியத் தகுதி என்பதற்கு சாகித்ய அகாடமிதான் அளவுகோல் எனும் அளவுக்கு புகழோடு செயல்பட்டு வருகிறது. எழுத்தாளர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் ஊக்குவிக்கும் சாகித்ய அகாடமியின் பணி மகத்தானது. போற்றுதலுக்குரியது. அவர்கள் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை ஜே.என்.யு. உடன் இணைந்து இங்கு கொண்டாடுவது சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

இந்தியாவில் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இருந்தாலும் ஜே.என்.யு.க்கு என்று, தனி குணம் உண்டு. கருத்தாழமிக்க உரையாடல்களுக்கு இடமாக உள்ள ஜே.என்.யு.வில் வெளிவரும் ஆய்வுகள், உலக அளவில் பேசப்படுகிறது. அதனால்தான் உலக அளவிலான பல்வேறு பல்கலைக்கழகங்கள் ஜே.என்.யு.வோடு

(கடைசி பக்கம் பார்க்க)

### வரும் 15-ம் தேதி முதல் காலை உணவு திட்டம்

# அரசு உதவிபெறும் அனைத்து பள்ளிகளிலும் அமலாகிறது

**தமிழ்நாடு அரசு நடவடிக்கை**

சென்னை, ஜூன் 28-

**அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஜூலை 15ம் தேதி முதல் தொடங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.**

கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏற்கெனவே காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சட்டப் பேரவையில் காலை உணவுத் திட்டத்துக்காக பட்ஜெட்டில் ரூ.600.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 2022 செப்டம்பர் முதல் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காலை உணவு திட்டத்தை ஜூலை 15ம் தேதி முதல் விரிவுபடுத்த அரசு திட்டமிட்டு அதற்கான பணிகளை செய்து வருகிறது.

தமிழகத்தில் 1,416 நகர்ப்புறப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ள நிலையில், அதன் விவரங்களை ஆய்வு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து தொடக்கக் கல்வித் துறை சார்பில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் (கிராமப்புறப் பகுதிகள்) பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் நடப்பு கல்வியாண்டு முதல் 1,416 நகர்ப்புற நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சமூகநலத் துறை சார்பில் பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பொறுப்பேற்க நேரிடும்: இந்நிலையில் சமூகநல ஆணையரகத்திடம் இருந்து மின்னஞ்சல் மூலமாக காலை உணவுத் திட்டம் தொடர்பாக நகர்ப்புற நிதியுதவி பெறும் பள்ளிகளின் விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் உள்ள நகர்ப்புற நிதியுதவி பெறும் பள்ளிகளின் விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதில் ஏதேனும் பள்ளிகள் விடுபட்டிருந்தால் அதை குறிப்பிட்டு கையொப்பத்துடன் உடனடியாக அனுப்ப வேண்டும். இந்த விவகாரத்தில் ஏதேனும் பள்ளிகள் விடுபட்டது தெரியவந்தால் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரே பொறுப்பேற்க நேரிடும். எனவே, கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2019-க்கு பிறகு போட்டியிடாததால் அங்கீகாரம் ரத்து:

# தமிழ்நாட்டில் 24 கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

சென்னை, ஜூன் 28-

**பதிவு செய்து அங்கீகரிக்கப்படாத 345 அரசியல் கட்சிகள் 2019க்குப் பிறகு ஒரு தேர்தலில் கூட போட்டியிடவில்லை என்று தலைமை தேர்தல் ஆணையம் கூறியுள்ள நிலையில் தமிழ்நாட்டில் தமிழ் மாநில கட்சி, மீனவ மக்கள் முன்னணி, காமராஜர் மக்கள் கட்சி உள்ளிட்ட 24 கட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.**

இந்திய தேர்தல் ஆணையத்தில் தற்போது பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் 2,800-க்கும் அதிகமான அரசியல் கட்சிகள் உள்ளன. இவற்றில் பல கட்சிகள் இந்த நிலையை தொடர்வதற்கு தேவையான நிபந்தனைகளை இதுவரை பூர்த்தி செய்யவில்லை. இது தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு வந்திருந்தது.

இதையடுத்து, இத்தகைய அரசியல் கட்சிகளை அடையாளம் காண நாடு முழுவதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் இதுவரை 345 அரசியல் கட்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையின் கீழ் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் இந்த 345 அரசியல் கட்சிகளையும் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை தொடங்கியுள்ளனர்.

இந்தநிலையில், 2019ம் ஆண்டுக்குப் பிறகு ஒரு தேர்தலில் கூட போட்டியிடாத 345 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை, பட்டியலில் இருந்து நீக்கும் நடவடிக்கையாக தமிழ்நாட்டில் தமிழ் மாநில கட்சி, மீனவ மக்கள் முன்னணி, காமராஜர் மக்கள் கட்சி உள்ளிட்ட 24 கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

வருமான வரி சலுகை, அங்கீகாரம், நட்சத்திர பரப்புரையாளர் அனுமதி, பதிவு செய்து அங்கீகரிக்கப்படாத கட்சிகள், அரசின் சலுகைகளை அனுபவிக்கிறார்கள். பதிவு செய்து அங்கீகரிக்கப்படாத கட்சிகள் 2019க்குப் பிறகு ஒரு தேர்தலில் கூட போட்டியிடவில்லை.

பதிவுசெய்யப்பட்ட கட்சிகளை தேர்தல் ஆணையப் பட்டியலிலிருந்து நீக்கலாமா என கேட்டு பதில் பெற்று 1 மாதத்திற்குள் பரிந்துரைக்க தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் எழுதி உள்ளது.

### காவிரியில் கர்நாடக அரசு

# தமிழகத்திற்கு 31 டி.எம்.சி. நீரை திறந்து விட வேண்டும்

**மேலாண்மை ஆணையம் உத்தரவு**

புதுடில்லி, ஜூன் 28-

**காவிரியில் தமிழகத்துக்கு 31 .24 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என கர்நாடகாவுக்கு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டு உள்ளது.**

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 41வது கூட்டம் வீடியோ கான்பரன்சிங் வாயிலாக நேற்று நடந்தது. இதில் தமிழகம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில அதிகாரிகள் பங்கேற்றனர். ஆணையத்தின் தலைவர் எஸ்.கே. ஹல்ர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி ஜூலையில் 31.24 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்துக்கு திறந்து விட வேண்டும் என கர்நாடகாவுக்கு உத்தரவிடப்பட்டது.

முன்னதாக நேற்று முந்தினம் காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் 117வது கூட்டம் அதன் தலைவர் வினித் குப்தா தலைமையில் காணொளி காட்சி மூலம் நடைபெற்றது. இதில் தமிழகத்திற்கு ஜூலை மாதம் வழங்க வேண்டிய 31.24 டிஎம்சி நீரை கர்நாடகா தடையின்றி வழங்க வேண்டும் என கர்நாடகா அரசுக்கு காவிரி ஒழுங்காற்று குழு உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கோவில்களில் முதல் மரியாதை வழக்கத்தை நிறுத்த வேண்டும்

**சென்னை ஐகோர்ட் கருத்து**

சென்னை, ஜூன் 28-


**கோவில் விழாக்களில் முதல் மரியாதை கொடுக்கும் வழக்கத்தை நிறுத்த வேண்டும் என்று சென்னை ஐகோர்ட் நீதிபதி தெரிவித்தார்.**

ஈரோடு மாவட்டம் பர்கூர் பகுதியில் உள்ள பந்தீஸ்வரர் கோவிலில் நடைபெறும் மகா பெரிய குண்டம் விழாவில் முதல் மரியாதை வழங்க உத்தரவிடக்கோரி தேவராஜ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த மனுவில், கோவில் வழக்கப்படி தங்கள் குடும்பத்தினர் தலைமையில் தான் சாமி ஊர்வலம் நடத்தப்படும் என்றும், தங்கள் குடும்பத்தினருக்குதான் முதல் மரியாதை வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் தனக்கு முதல் மரியாதை வழங்கப்பட வேண்டும் என்று மனுதாரர் தேவராஜ் தனது மனுவில் தெரிவித்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், பல கோவில் விழாக்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட காரணமாக இருப்பதே இந்த முதல் மரியாதைதான் என்று தெரிவித்தார்.

மேலும் கோவில் விழாக்களில் முதல் மரியாதை கேட்பதன் மூலம் கடவுளை விட தங்களை மேலானவர்களாக காட்ட முயற்சிக்கிறார்கள் என்றும், இது விழாக்களை நடத்துவதற்கான நோக்கத்தை வீழ்த்திவிடும் என்றும் நீதிபதி வேதனை தெரிவித்தார். இதுபோன்ற மரபுகள் சமத்துவத்திற்கு எதிரானது என்றும், கடவுள் முன் அனைவரும் சமம் என்றும் குறிப்பிட்ட நீதிபதி, கோவில் விழாக்களில் முதல் மரியாதை கொடுக்கும் வழக்கத்தை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தார். அதோடு, மனுதாரரின் கோரிக்கையை ஏற்க மறுத்து வழக்கை முடித்து வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
| --- | --- |
| + 303.03 | + 88.80 |
| பாயின்ட் 84,058.90 | பாயின்ட் 25,637.80 |



**தங்கம்**
1 சவரன் ₹71,880
1 கிராம் ₹8,985



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.50



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# விரைவில் இந்தியாவுடன் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம்: ட்ரம்ப் அறிவிப்பு



**வாஷிங்டன், ஜூன் 28-**

இந்தியா - அமெரிக்கா இடையே மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அதிபர் டொனால்டு ட்ரம்ப், "நாங்கள் சில சிறந்த ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம். இந்தியாவுடன் ஒரு மிகப் பெரிய ஒப்பந்தம் ஏற்பட உள்ளது. சீனா உடனான ஒப்பந்தத்தையும் நாங்கள் தொடங்கி இருக்கிறோம். நேற்று தான் சீனாவுடன் கையெழுத்திட்டோம். நாங்கள் எல்லோருடனும் ஒப்பந்தங்கள் செய்யப் போவதில்லை " என தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இந்திய பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் ராஜேஷ் அகர்வால் தலைமையிலான இந்திய குழு, வியாழக்கிழமை (ஜூன் 26) அமெரிக்காவுக்கு வந்துள்ள நிலையில், ட்ரம்பின் கருத்துக்கள் வெளியாகி உள்ளன. வர்த்தகத் துறையின் சிறப்புச் செயலாளராக உள்ள ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழு தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது.

ஜூலை 9 ஆம் தேதிக்கு முன்னர் ஒப்பந்தத்தை இறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கமேனியை கொல்ல திட்டம்: ஒப்புக்கொண்டது இஸ்ரேல்



**டெல் அவிவ், ஜூன் 28-**

கமேனியே கொல்ல திட்டமிடப்பட்டதை இஸ்ரேல் தற்போது ஒப்புக் கொண்டுள்ளது.

ஈரான் தலைவர் கமேனியை கொல்ல திட்டமிட்டோம். ஆனால், அவர் நிலத்துக்கு அடியில் அவர் சென்று பதுங்கினார்,'' என இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் காட்ஸ் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அந்நாட்டு டிவிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது: கமேனி எங்கள் கண்ணில் பட்டிருந்தால் அவரை நாங்கள் நிச்சயம் கொன்றிருப்போம். இதனை அறிந்து கொண்ட அவர், நிலத்துக்கு அடியில் சென்று பதுங்கு குழியில் பதுங்கினார். இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட தளபதிகளுக்கு பதில் வந்தவர்களுடனான தொடர்பையும் அவர் துண்டித்து கொண்டார்.

இதனால், எங்களது முயற்சி சாத்தியம் இல்லாமல் போனது.போரின் போது, தீவிரமாக அவரை தேடினோம். ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது எங்கள் நோக்கம் அல்ல. தலைமையை மாற்றுவதே நோக்கம். கமேனியை கொல்வதற்கு அமெரிக்காவின் அனுமதி ஏதும் தேவையில்லை. இவ்வாறு காட்ஸ் கூறினார்.

ஈரான் தயாரிக்கும் அணுஆயுதங்களினால், தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என குற்றம்சாட்டிய இஸ்ரேல் அந்நாடு மீது தாக்குதல் நடத்தியது. இதில், ஈரானின் முக்கிய படை தளபதிகள் கொல்லப்பட்டனர். இந்தப் போர் 12 நாட்கள் நீடித்த நிலையில், அமெரிக்காவின் தலையீட்டின் பேரில், போர் நிறுத்தம் அமலானது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளியில் 2.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும்கூடம், கலையரங்கம், மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டிடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

# ரயில் கட்டண உயர்வு எப்பொழுது அமல்? மத்திய அமைச்சர் சோமண்ணா விளக்கம்

**காஞ்சிபுரம், ஜூன் 28-**

ரயில் கட்டணம் இன்னும் உயர்த்தப்பட வில்லை என்று மத்திய ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வந்த மத்திய ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணாவை சூழ்ந்து கொண்டு இந்திரா நகர் பொது மக்கள் மனு அளித்தனர். காஞ்சிபுரம்: ரயில் கட்டண உயர்வு என்பது தற்போது பரிசீலனையில் மட்டுமே உள்ளது, இன்னும் அமல்படுத்தப்படவில்லை, என்று ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா தெரிவித்தார்.

மத்திய ரயில்வே அமைச்சர் சோமண்ணா நேற்று (ஜூன் 27) காஞ்சிபுரம் வந்தார். அவரை பாஜகவினர் மற்றும் ரயில்வே துறை அதிகாரிகள் வரவேற்றனர். காஞ்சிபுரத்தில் உள்ள புதிய ரயில் நிலையத்தை ஆய்வு செய்தார். இந்த ரயில்நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அதை மேம்படுத்துவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது அவரை இந்திரா நகர் பொதுமக்கள் சூழ்ந்து கொண்டனர். ரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்ட பிறகு ரயில்வே கேட் திறக்கப் படுவதில்லை. இதனால் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே தங்கள் பகுதிக்கு எளிதில் சென்று வரும் வகையில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இந்த மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: பரந்தூர் பகுதியில் விமான நிலையம் அமைய உள்ளது. இந்த விமான நிலையத்துடன் ரயில் சேவையை இணைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. ரயில் கட்டண உயர்வு என்பது தற்போது பரிசீலனையில் மட்டுமே உள்ளது. இன்னும் அமல்படுத்தப்படவில்லை.'' என்று அவர் கூறினார்.

# ஈரான், இஸ்ரேலில் இருந்து இதுவரை 4,400 இந்தியர்கள் மீட்பு

**புதுடெல்லி, ஜூன் 28-**

ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளில் இருந்து இதுவரை 4,400-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மீட்டு அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நடைபெற்றதை அடுத்து, அந்த இரு நாடுகளிலும் வசித்து வந்த இந்தியர்களை மீட்டு அழைத்து வருவதற்காக மத்திய அரசு கடந்த 18-ம் தேதி ஆபரேஷன் சிந்து என்ற பெயரில் நடவடிக்கையை தொடங்கியது. இதுவரை 19 சிறப்பு விமானங்களில், 4,400-க்கும் மேற்பட்ட இந்தியர்களை இந்தியா மீட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், "ஆபரேஷன் சிந்துவின் ஒரு பகுதியாக, 3 இந்திய போர் விமானங்கள் உட்பட 19 சிறப்பு விமானங்கள் மூலம் மொத்தம் 4415 இந்திய நாட்டினர் (ஈரானில் இருந்து 3597 பேர் மற்றும் இஸ்ரேலில் இருந்து 818 பேர்) இதுவரை வெளியேற்றப்பட்டுள்ளனர். 9 நேபாள நாட்டினர், 4 இலங்கை நாட்டினர் மற்றும் ஒரு இந்திய நாட்டவரின் ஈரானிய மனைவி ஆகியோர் ஈரானில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஈரானில் இருந்து இந்தியர்களை அழைத்து வர மொத்தம் 14 விமானங்களை நாங்கள் அனுப்பி வைத்தோம். இந்த விமானங்கள் மஷாத், ஆர்மீனியாவின் யெரவான் மற்றும் துர்க்மெனிஸ்தானில் உள்ள அஷ்காபாத் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டன. எகிப்து மற்றும் ஜோர்டான் அரசாங்கத்தின் ஆதரவுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இஸ்ரேல், ஜோர்டான் மற்றும் எகிப்தில் உள்ள இந்திய தூதரகங்கள் டெல்லியில் உள்ள வெளியுறவு அமைச்சக தலைமையகத்துடன் மிகவும் நெருக்கமாக ஒத்துழைத்தன என்று தெரிவித்துள்ளார்.

## 4.8 ரிக்டர் அளவில்
# சீனாவில் நிலநடுக்கம்

**பீஜிங், ஜூன் 28-**

சீனாவில் ரிக்டர் 4.8 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனாவில் நேற்று காலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 9.56 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 95 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 34.71 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 98.54 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

**மரம் மனிதனின் உரம்**

## பாகிஸ்தானில் அதிர்ச்சி சம்பவம்:
# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 18 பேர்

**லாகூர், ஜூன் 28-**


பாகிஸ்தானில் ஏற்பட்ட ஆற்றில் வெள்ளத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 18 பேரை இழுத்து சென்றது. இதில் 4 பேர் உடல்கள் மீட்கப்பட்டது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள ஸ்வாட் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 4 பேர் உடல் மீட்கப்பட்டுள்ள நிலையில், மற்றவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

பக்துன்க்வா மாகாணத்திற்கு சுற்றுலா வந்த குழுவின் ஒரு பகுதியினர் (ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர்), ஸ்வாட் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். கனமழை காரணமாக வெள்ளம் அதிகரித்ததால் இழுத்துச் செல்லப்பட்டனர். மீட்புப் படையினர் ஐந்து வெவ்வேறு இடங்களில் அவர்களை தேடிவருகின்றனர்.

இந்த நிலையில் 4 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. 18 பேரில் யாரும் பிழைக்க வாய்ப்பில்லை என அஞ்சப்படுகிறது. ஸ்வாட் ஆறு, பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள வற்றாத நதிகளில் ஒன்றாகும்.

**28-06-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். தனவரவும் தூக்கமும் குறையும்.

**ரிஷபம்:-** மன தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும் நாள். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**மிதுனம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடலாம்.

**கடகம்:-** பெரியோர் நேசம், வாகன யோகம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். மனம் மகிழும் நாள்.

**சிம்மம்:-** வீண் வம்பை விலைக்கு வாங்காதீர்கள். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**கன்னி:-** இன்று, உங்கள் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவை தட்டும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை எதிர் பார்க்கலாம்.

**துலாம்:-** எல்லா வகையிலும் ஏற்றந்தரும் நாள். தனலாபம், கல்வியில் வெற்றி, நல் ஆரோக்கியம் என அனைத்தும் நல்லதாக நடக்கும். மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும்.

**விருச்சிகம்:-** இன்று, உங்கள் தெய்வீக செயல்கள் அனைத்தும் முறைப்படி நிறைவேறும். எதிலும் வெற்றி கிட்டும். காம இச்சை அதிகரிக்கும், வாழ்க்கையில் முன்னேற்றங்கள் ஏற்படும் முக்கிய திருப்பங்களை எதிர் பார்க்கலாம்.

**தனுசு:-** சுமாரான நாள், அடக்கி வாசிக்க வேண்டிய நாள். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள். பணிவோடு இருக்கப் பயன் தரும் நாள்.

**மகரம்:-** இன்று, இனிய வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நாள். இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும் நாள். அரசால் ஆதாயம் உண்டு. இந்த நாள் இனிய நாள்.

**கும்பம்:-** எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் பெருகும். நல்ல நேரத்தில் நண்பர்கள் கை கொடுப்பர். புதுப் பெண்கள் சிநேகத்தால் துள்ளாத மனமும் துள்ளும். தனவரவு கூடும். பயண சுகம் உண்டு.

**மீனம்:-** இன்று, எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும் . குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. பயணத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள்.

## திருவள்ளூர் அருகே
# போலீஸ்காரரை காரில் இழுத்து சென்ற ரவுடியை பிடிக்க 2 தனிப்படை அமைப்பு

**திருவள்ளூர், ஜூன் 28-**

திருவள்ளூர் அருகே மோட்டார் சைக்கிளில் சென்ற போலீஸ்காரரை காரில் இழுத்து சென்ற ரவுடியை 2 தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

சென்னை பாடர்தோட்டம் பகுதியை சேர்ந்தவர் அழகு ராஜா. இவர் மீது கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மயிலாப்பூரை சேர்ந்த சிவக்குமார் என்ற ரவுடியை கொலை செய்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக அழகு ராஜா உள்ளார்.

இந்நிலையில் பிரபல ரவுடி அலகு ராஜா திருவள்ளூர் மாவட்டம் திருப்பாச்சூர் பகுதியில் பதுங்கி இருப்பதாக சென்னை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தனிப்படை போலீசார் அவரை பிடிக்க அங்கு விரைந்தனர். நேற்று முன்தினம் மதியம் 2 மணி அளவில் அழகு ராஜா இருக்கும் இடத்தை கண்டுபிடித்த 2 போலீசார், அவரை பிடிக்க மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்து சென்றனர். அலகு ராஜா காரில் சென்று கொண்டு இருந்தார். திருவள்ளூர்-திருப்பதி நெடுஞ்சாலையில் கார் மெதுவாக சென்ற நேரத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கிய போலீஸ்காரர், அழகு ராஜா சென்ற காரை வழிமறித்து பிடிக்க முயன்றார். உடனே சுதாரித்து கொண்ட அழகு ராஜா காரை நிறுத்தாமல் வேகமாக இயக்கினார்.

இருப்பினும் உயிரை பணயம் வைத்து அந்த போலீஸ்காரர் காரின் பக்கவாட்டில் தொங்கியபடி சென்றார். ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு மேலாக போலீஸ்காரர் தொங்கியபடி பயணம் செய்தார். பின்னால் மற்றொரு போலீசார் மோட்டார் சைக்கிளில் அவர்களை பின்தொடர்ந்தார். சினிமா பாணியில் நடந்த இந்த காட்சியை கண்ட வாகன ஓட்டிகள், மற்றும் அந்த வழியாக சென்ற பொதுமக்கள் அதிர்ச்சியில் உரைந்தனர். ஒரு கட்டத்தில் தனது பிடியை விட்ட போலீஸ்காரர் சாலையில் விழுந்தார். அவர் ஹெல்மெட் அணிந்து இருந்ததால் அதிர்ஷடவசமாக லேசான காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட போலீஸ்காரர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதனைத்தொடர்ந்து ரவுடி அழகு ராஜாவை பிடிக்க 2 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. ரவுடி அழகு ராஜாவை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அணுசக்தி ஒப்பந்த விவகாரம்: அமெரிக்காவுக்கு ஈரான் பதிலடி

**டெஹ்ரான், ஜூன் 28-**

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அடுத்த வாரம் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் என ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஈரான் அணுஆயுதங்களை தயாரிக்க ஆரம்பம் முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுக்க மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் உண்டானது.

ஈரானின் போர்டோவ், நடான்ஸ், இஸ்பஹான் ஆகிய 3 அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியது. பின்னர், ஈரான், இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்காவின் தாக்குதலில், ஈரானின் அணுசக்தி நிலையங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்த சூழலில், அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அடுத்த வாரம் ஈரான் உடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என அதிபர் டிரம்ப் அறிவித்தார். இது குறித்து ஈரான் செய்தி சேனலுக்கு, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாவது: அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அடுத்த வாரம் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம்.

அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமா? இதனால் ஈரானுக்கு ஏதும் பலன் கிடைக்குமா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அணுசக்தி நிலையங்கள் சேதம் அடைந்துள்ளது. அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதல்கள் ஈரானின் அணு ஆயுத திறனை கட்டுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## அகமதாபாத் விமான விபத்து;
# ஐ.நா., விசாரணையை நிராகரித்தது இந்தியா

**புதுடில்லி, ஜூன் 28-**

ஏர் இந்தியா விமான விபத்து தொடர்பான விசாரணைக்கு உதவ ஐ.நா., விமான போக்குவரத்து ஆணையம் முன்வந்தது. ஆனால், இதனை மத்திய அரசு நிராகரித்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

குஜராத் அகமதாபாத்தில் கடந்த ஜூன் 12ம் தேதி ஏர் இந்தியா விமானம் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், 270க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது குறித்து விமான விபத்துகள் விசாரணை ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. பி.ஜே., மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடத்தின் மேற்கூரையில், கருப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டது.

அதன் தரவுகள் விமான விபத்துகள் விசாரணை ஆணையத்தில் பதவிறக்கம் செய்யப்பட்டது. கருப்புப் பெட்டி தரவுகளின் பகுப்பாய்வு நடந்து வருகிறது.

இதனிடையே, ஜூன் 13-ம் தேதி முதல் கருப்புப் பெட்டியும், ஜூன் 16-ம் தேதி 2-வது கருப்புப் பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், விசாரணை குறித்து எந்த தகவலும் இல்லாதது பற்றி கேள்வி எழுந்து வருகிறது. தரவுகளை பகுப்பாய்வு செய்யும் பணிகள் இந்தியாவில் நடக்கிறதா? அல்லது அமெரிக்காவில் நடக்கிறதா? என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்த நிலையில், ஏர் இந்தியா விமான விபத்து தொடர்பான விசாரணைக்கு உதவ ஐ.நா., விமான போக்குவரத்து ஆணையம் முன்வந்தது. ஆனால், இதனை மத்திய அரசு நிராகரித்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளது. சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் விதிகளை பின்பற்றி, உள்நாட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான விமான விபத்துக்களின் முதற்கட்ட அறிக்கைகள், விபத்து நடந்த 30 நாட்களுக்குள் வெளியிடப்படும். அந்த வகையில், கருப்பு பெட்டியில் இருக்கும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் ஏர் இந்தியா விமான விபத்துக்கான முதற்கட்ட அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவுக்கு எதிராக
# சீனா, பாக்., உடன் கூட்டணியா? வங்கதேசம் மறுப்பு

**டாக்கா, ஜூன் 28-**

இந்தியாவுக்கு எதிராக சீனா, பாக்கிஸ்தான் உடன் கூட்டணி இல்லை என்று வங்கதேசம் அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான நோக்கத்துடன் எந்த சந்திப்பையும் நடத்தவில்லை என்று சீனா மற்றும் பாகிஸ்தானுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து வங்கதேசம் விளக்கம் அளித்துள்ளது. சீனாவின் குன்மிங்கில் சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாடுகளின் பிரதிநிதிகள் கடந்த ஜூன் 19ம் தேதி முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த 3 அண்டை நாடுகளுடனும் இந்தியாவுக்கு முரண்பாடு இருந்து வருகிறது. இந்த சூழலில், இந்த சந்திப்பு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தை குறித்து வங்கதேச இடைக்கால அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆலோசகர் தவுஹித் ஹொசைன் கூறுகையில், ' சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் இடையே நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தை அரசியல் தொடர்பானது அல்ல. அதிகாரிகள் அளவிலானது மட்டுமே. இந்த சந்திப்பில் கூட்டணி வைப்பதற்கான எந்த சாத்தியக்கூறுகளும் இல்லை. நாங்கள் யாருடனும் எந்த கூட்டணியும் அமைக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நோக்கத்தில் இந்த சந்திப்பு நடக்கவில்லை என்பதை உறுதியளிக்கிறேன்,' எனக் கூறினார்.

# கும்பகோணம் மாநகராட்சியை கண்டித்து அ.தி.மு.க. வரும் 4-ம் தேதி ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜூன் 28-**

கும்பகோணம் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து வருகிற 4-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்சிக்கு வந்தவுடன் மக்களுக்குத் தேவைப்படும் எந்தவிதமான அடிப்படை மற்றும் அத்தியாவசிய வசதிகளையும் ஏற்படுத்தாமல், அவசர அவசரமாக 2021-ஆம் ஆண்டு கும்பகோணத்தை மாநகராட்சியாக அறிவித்தது தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசு. கும்பகோணம் மாநகராட்சியில், பெரும்பாலான சாலைகள் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன. மாநகரம் முழுவதும் குப்பை கூளங்கள் அகற்றப்படுவதில்லை. வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீரில் கழிவுநீர் கலப்பதால் நோய் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது.



இந்நிலையில், மாநகராட்சியின் செயலற்ற நிர்வாகங்களை கைக்கட்டி வேடிக்கை பார்க்கும் விடியா தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும்; கும்பகோணம் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும், தஞ்சாவூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 4-ம் தேதி காலை 9.30 மணிக்கு கும்பகோணம் காந்தி பார்க் அருகில் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விஜய் தலைமையில் ஜூலை 4-ம் தேதி கூடுகிறது த.வெ.க. செயற்குழு கூட்டம்

**சென்னை, ஜூன் 28-**

விஜய் தலைமையில், வருகிற 4-ம் தேதி மாநில செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கின்றன. இந்த தேர்தலில் முதல் முறையாக களம் காண இருக்கும் தமிழக வெற்றிக்கழகம் கட்சி வெற்றிக்கான வியூகத்தை அமைத்து வருகிறது.

இந்நிலையில் ஜூலை 4-ம் தேதி தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில செயற்குழுக் கூட்டம், தலைவர் விஜய் தலைமையில், வருகிற 04.07.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு, சென்னை, பனையூரில் உள்ள கழகத்தின் தலைமை நிலைய செயலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில், கழகத்தின் சார்பாக அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் குறித்தும். நம் வெற்றித் தலைவர் அவர்களின் நிகழ்வுகள் மற்றும் தொடர் மக்கள் சந்திப்புகள் குறித்த திட்டமிடல்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒப்பந்த உரிமைகள் கைவிடப்பட்டதால் தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு பாதிப்பு

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு

**டெல்லி, ஜூன் 28-**

அவசர நிலை காலத்தின் போது ஒப்பந்த உரிமைகள் கைவிடப்பட்டதற்கான விளைவுகள் தமிழ்நாட்டில் இன்னும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 1975ம் ஆண்டு ஜூன் 25ம் தேதி நாடு முழுவதும் அவசர நிலையை அமல்படுத்தினார். இந்தியாவின் இருண்ட காலமாக பார்க்கப்படும் அவசர நிலையின் பேச்சு, கருத்து சுதந்திரம நெருக்கடியை சந்தித்தது. எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பத்திரிக்கைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. அவசர நிலையை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தினர். 2 ஆண்டுகளாக நீடித்த அவசர நிலை இந்திரா காந்தியின் ஆட்சி முடிவுக்கு வந்து ஜனதா கட்சி ஆட்சியமைத்த உடன் 1977 மார்ச் 21ம் தேதி திரும்பப் பெறப்பட்டது. இந்தியாவில் அவசர நிலை அமல்படுத்தப்பட்டு கடந்த 25ம் தேதியுடன் 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் அவசர நிலை அமல்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்தது தொடர்பாக பா.ஜ.க. இளைஞரணி சார்பில் தலைநகர் டெல்லியில் நேற்று நிகழ்ச்சியில் நடைபெற்றது.

இதில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் ஜெய்சங்கர் பேசியதாவது: அவசர நிலை காலத்தின் போது பாராளுமன்றத்தில் விவாதமின்றி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. நமது மீனவர்கள் இலங்கை படையினரால் கைது செய்யப்படுவது தொடர்பான செய்திகளை நாம் கேட்டிருப்போம். கடலில் இலங்கை எல்லைக்குள் சில பகுதிகளுக்கு இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க செல்லலாம் என ஒப்பந்தம் இருந்தது.

ஆனால், அவசர நிலை அமல்படுத்தப்பட்டபோது அந்த ஒப்பந்த உரிமைகள் கைவிடப்பட்டன. இதனால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சூழ்நிலை உருவானது. ஒப்பந்த உரிமைகள் கைவிடப்படதற்கான விளைவுகள் தமிழ்நாட்டில் இன்னும் பாதிப்பை ஏற்படுத்துகிறது' என்றார்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 70 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

**தர்மபுரி, ஜூன் 28-**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 70 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

தமிழக-கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்து வரும் கனமழையின் காரணமாக கர்நாடக அணைகளான கபிணி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கர்நாடக அணைகளில் இருந்து உபரிநீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து உயரத் தொடங்கியது.

நேற்று முன்தினம் ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 57 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. நீர்வரத்து உயர்ந்ததை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும், அருவிகளிலும் பொதுமக்கள் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வரும் நிலையில், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டடுள்ளது.

இந்த நிலையில், தற்போதைய நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 70 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வரும் நிலையில், தீவிர பாதுகாப்பு பணிகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

# கோவில் தேர் திருவிழாவில் சாதிய அடையாளங்கள் கூடாது

## ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு

**மதுரை, ஜூன் 28-**

நெல்லையப்பர் கோவில் தேர் திருவிழாவின் போது எந்தவித சாதிய அடையாளங்களும் பயன்படுத்தக் கூடாது என்று மதுரை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

நெல்லை பாளையங்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உலக புகழ்பெற்ற நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோவில் தேர் திருவிழா வருடம் தோறும் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு திருவிழா வருகின்ற ஜூலை 8-ந் தேதி நடைபெற உள்ளது. இந்த திருவிழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் தமிழகம் முழுவதும் இருந்தும் கலந்து கொள்கின்றனர்.

இந்த திருவிழாவில் பல்வேறு சமுதாய தலைவர்களை வாழ்க, ஒழிக கோஷம் போடுவது, இளைஞர்கள் சாதி ரீதியான டி-சர்டுகளை அணிந்து வருவது போன்ற கலாச்சாரத்தை கையில் எடுத்துள்ளனர்.

இதனால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதில் மிகுந்த சிரமமும் ஏற்படுகிறது. எனவே ஜாதி மோதல்களை உருவாக்க மூல காரணியாக உள்ள இந்த செயல்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதிகள் சுப்பிரமணியம், நீதிபதி மரியா கிளாட் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் முடிவில் நீதிபதிகள் பிறப்பித்துள்ள உத்தரவில், ஏற்கனவே சாதிய ரீதியான அடையாளங்கள் பயன்பாடு குறித்த விதிகள் உள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு காவல்துறை தலைவர் மற்றும் இந்து சமய அறநிலை துறை ஆணையாளர் இணைந்து இந்த திருவிழாவின் போது எந்தவித சாதிய அடையாளங்களும் பயன்படுத்தக் கூடாது.

தேர் திருவிழாவை அமைதியான முறையில் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனள்.

# பா.ஜ.க. கூட்டணியில் விஜய் இணைவாரா?

## காத்திருங்கள் என அமித்ஷா பதில்

**புதுடெல்லி, ஜூன் 28-**

தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க. இணையுமா என்ற கேள்விக்கு காத்திருங்கள் என அமித்ஷா பதிலளித்தார்.

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தமிழக நாளிதழ்களுக்கு அளித்த சிறப்பு பேட்டியில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையுமா..? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், "தேர்தலுக்கு இன்னும் போதுமான காலஅவகாசம் இருக்கிறது. எனவே இன்னும் சில காலம் காத்திருங்கள்; அனைத்தும் தெளிவாகிவிடும்" என்று கூறினார்.

இதனைத்தொடர்ந்து தமிழகத்தில் கூட்டணி அரசு அமைக்கப்படுமா..? என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், "எங்கள் தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் அரசு அமைக்கும், அதில் பா.ஜனதா கட்சியின் பங்கு இருக்கும். தேர்தலில் நாங்கள் அ.தி.மு.க தலைமையின் கீழ் போட்டியிடுகிறோம். முதல்வர் அ.தி.மு.க.வில் இருந்து வருவார்" என்று அமித்ஷா கூறினார்.

அடுத்ததாக, நீங்கள் அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்றவர்களை ஒன்றிணைக்க முயற்சி செய்கிறீர்கள்? என்று கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், "நான் யாரையும் ஒன்றிணைக்கவில்லை. அது அவர்களது கட்சி குறித்த விஷயம்.

அவர்கள் தாங்களாகவே முடிவு எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

தேர்தல் நெருங்கி உள்ள நிலையில், தமிழகத்தில் பா.ஜனதாவின் வளர்ச்சி குறித்து நீங்கள் திருப்தியாக இருக்கிறீர்களா? என்ற கேள்விக்கு, "என் நம்பிக்கை என்னவென்றால், அ.தி.மு.க. மற்றும் பா.ஜனதா. அதாவது தேசிய ஜனநாயக கூட்டணி மிக வலுவான நிலையில் இருக்கிறது" என்று அமித்ஷா பதில் அளித்தார்.

# படிக்கட்டுகளில் சாகசம் செய்யும் மாணவர்கள் மீது நடவடிக்கை

## ஐகோர்ட் மதுரை கிளை அதிரடி உத்தரவு

**மதுரை, ஜூன் 28-**

பேருந்துகளில் சாகசத்துக்காக படிக்கட்டில் நின்றும், தொங்கியபடியும் பயணம் செய்யும் மாணவர்கள் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: பொதுப் பேருந்துகளில் புத்தகப்பை, உணவுப்பைகளுடன் செல்லும் போது பேருந்தில் கூட்ட நெருக்கடியில் சிக்கி மாணவ, மாணவிகள் சிரமப்படுகின்றனர். இதனால் அவர்கள் பேருந்து படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்கின்றனர். எனவே பள்ளி, கல்லூரி நேரங்களில் மாணவ, மாணவிகளுக்காக மட்டும் தனி பேருந்து இயக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வு நேற்று விசாரித்தது. பிள்ளைகளை சிறப்பாக வளர்ப்பதில் பெற்றோர்களுக்கு அதிக கடமை உள்ளது. தற்போது பள்ளி பருவத்திலேயே மாணவர்கள் புகைப்பழக்கம், மது, கஞ்சா உள்ளிட்ட பழக்கங்களுக்கு ஆளாகி வருவது அதிகமாக உள்ளது. மாணவிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கும் அளவில் நிலைமை உள்ளது. பேருந்துகளில் மாணவர்கள் படிக்கட்டுகளில் பயணம் செய்வது தொடர்பாக ஏராளமான புகார்கள் வருகின்றன. ஓட்டுநர், நடத்துநர் அறிவுறுத்தினாலும் மாணவர்கள் அதனை ஏற்காமல் சாகசம் என நினைத்து படிக்கட்டில் பயணம் செய்து விபத்தில் சிக்குகின்றனர். படிக்கட்டுகளில் பயணம் செய்வது மோட்டார் வாகன விதியின் படி தண்டனைக்குரிய குற்றம். படிக்கட்டில் பயணிப்பவர்கள் மீது போலீஸார் வழக்கு பதிவு கூட செய்யலாம். எனவே, பயணத்தின் போது மாணவர்கள் பேருந்திற்குள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதையும் மீறி சாகசத்திற்காக படிக்கட்டுகளில் பயணம் செய்யும் மாணவர்கள் மீது போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டது.

# தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வருவதற்கு வாய்ப்பு உள்ளதா?

## தமிழக காங். தலைவர் செல்வப்பெருந்தகை விளக்கம்

**திண்டிவனம், ஜூன் 28-**

பா.ம.க. தி.மு.க. கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? என்பது குறித்து செல்வப்பெருந்தகை விளக்கமளித்துள்ளார்.



திண்டிவனத்தில் உள்ள தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று (ஜூன் 27) சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது: இது அரசியலுக்கு அப்பாற்பட்ட சந்திப்பு. அவருடைய உடல்நிலை குறித்து விசாரித்துவிட்டு செல்கிறேன். இந்த சந்திப்பில் கூட்டணி குறித்தோ, அரசியல் குறித்தோ இல்லை. அன்புமணி- ராமதாஸ் சமாதானமாக இருந்தால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார். அப்போது பா.ம.க. தி.மு.க. கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், இதை முதல்வர் ஸ்டாலின் முடிவு செய்ய வேண்டும் என்றார். பா.ம.க.வில் நிலவும் பிரச்சினைக்கு தி.மு.க.தான் காரணம் என்ற அன்புமணி ராமதாஸின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு, " பா.ம.க.வில் நிலவும் பிரச்சினைக்கு தி.மு.க.தான் காரணம் என்று அன்புமணி புரிதல் இல்லாமல் சொல்கிறார். பா.ஜ.க.வை சமாதானப்படுத்துவதற்காக அன்புமணி அவ்வாறு கூறியிருப்பாரே தவிர, அவருடை உள்மனது அப்படி சொல்லாது. பா.ம.க.வில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு பா.ஜ.க.தான் காரணம். பா.ஜ.க. தான் எங்கெல்லாம் கூட்டணி வைக்கிறார்களோ, அந்த கட்சியை உடைத்துவிடுவார்கள்.

அந்த கட்சியை ஸ்வாஹா செய்துவிடுவார்கள். அடுத்தது அதி.மு.க.வை ஸ்வாஹா செய்யப் போகிறார்கள். கூட்டணி என்று சொல்லிவிட்டு, அதி.மு.க.வின் தலைமைக் கர்த்தாவான அண்ணாவையும், பெரியாரையும் கொச்சைப்படுத்தி வீடியோ வெளியிடுகின்றனர். அதற்கு பெயர் என்ன?" என்று அவர் கூறினார்.

# தேசிய நிதி உதவி முடிவுகளில் முரண்பாடு: மத்திய அமைச்சருக்கு கனிமொழி கடிதம்

**சென்னை, ஜூன் 28-**

தேசிய பட்டியல் சாதியினருக்கான பெல்லோஷிப் முடிவுகளில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை களைய வேண்டும் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தி.மு.க. எம்.பி. கனிமொழி, மத்திய அமைச்சர் வீரேந்திர குமாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

2024-ம் ஆண்டு ஜூன் மாத சுழற்சிக்கான தேசிய பட்டியல்சாதியினர்பெல்லோஷிப் (உயர்கல்வியை தொடர நிதி உதவி) முடிவுகளில் உள்ள முரண்பாடுகள் காரணமாக நாடு முழுவதும் நூற்றுக் கணக்கான பட்டியல் சாதி மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் யு.ஜி.சி-நெட் முடிவுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 865 மாணவர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. ஆனால் அறிவிக்கப்பட்ட கட்-ஆப் மதிப்பெண்களுக்கு மேல் மதிப்பெண் பெற்ற சில மாணவர்கள் இந்த பட்டியலில் சேர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பலர் திருத்தம் கோரி அணுகினர். இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த பேரின் எண்ணிக்கை 865 இருந்து 805-ஆக குறைக்கப்பட்டது. மார்ச் மாதம்



தேசிய பட்டியல் சாதியினருக்கான பெல்லோஷிப் வழங்கப்பட்ட பட்டியல் சாதி பிரிவை சேர்ந்த சுமார் 60 மாணவர்கள், திருத்தப்பட்ட பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாத முடிவுகளின் அடிப்படையில் பலர் ஏற்கனவே பி.எச்.டி படிப்புகளில் சேர்ந்தனர். தற்போது இந்த தன்னிச்சையான மாற்றத்தால் அவர்களின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது. எனவே காலியிடங்களின் அசல் எண்ணிக்கையை 865 ஆக மீண்டும் உயர்த்த நடவடிக்கை எடுத்து கடந்த ஆண்டை போலவே 60 மாணவர்களை கொண்ட கூடுதல் பட்டியல் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அக்கடித்தில் கனிமொழி எம்.பி கூறி உள்ளார்.

# சீனாவுடனான பதற்றத்தை குறைக்க 4 திட்டங்களை எடுத்துரைத்த ராஜ்நாத்

**பீஜிங், ஜூன் 28-**

சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் டாங் ஜூனை சந்தித்த நமது பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், எல்லையில் பதற்றத்தை குறைப்பது மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்துவது தொடர்பாக 4 திட்டங்களை தெரிவித்தார்.



சீனாவின் கிங்டாவோ நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார். இந்த மாநாட்டுக்கு இடையே, சீனா பாதுகாப்புத்துறை அமைச்சர் டாங் ஜூனை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பேசினார். அப்போது, பீஹாரின் மதுபானி ஓவியத்தை பரிசாக ராஜ்நாத் வழங்கினார். மேலும், பாகிஸ்தான் தூண்டிவிடும் பயங்கரவாதம் குறித்த பிரச்னையை கிளப்பினார். இதற்கு பதிலடியாக இந்தியாவின், 'ஆப்பரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை பற்றியும் எடுத்துரைத்தார்.

இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளில் எல்லையில் பதற்றத்தை குறைத்து அமைதி நிலவவும், உறவை மேம்படுத்தவும் நான்கு திட்டங்களை ராஜ்நாத் விளக்கினார். அதன்படி, 2024 ல் ஒப்புக் கொள்ளப்பட்ட படைகுறைப்பு திட்டத்தை பின்பற்றுதல், பதற்றத்தை குறைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளுதல், எல்லை வரையறை இலக்கை அடைவதற்கான முயற்சிகளை துரிதப்படுத்துதல், கருத்து வேறுபாடுகளை குறைப்பதற்கும், உறவுகளை மேம்படுத்துவதற்கும் புதிய செயல்முறைகளை தயாரிக்க சிறப்பு பிரதிநிதிகளை பயன்படுத்துதல் ஆகிய திட்டங்களை எடுததுரைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பாக ராஜ்நாத் சிங் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: ஆறு ஆண்டுகளுக்கு பிறகு கைலாஷ் மானசரோவர் யாத்திரை துவக்குவதற்கு எனது மகிழ்ச்சியை தெரிவித்தேன். இரு தரப்பு உறவில் புதிய சிக்கல்களை தவிர்ப்பதுடன், நேர்மறையான தருணத்தை பராமரிப்பது இரு தரப்புக்கும் முக்கியம். இவ்வாறு அந்த பதிவில் கூறப்பட்டு உள்ளது.

## நாடு முழுவதும்

# 8.5 லட்சம் போலி வங்கிக்கணக்குகள்

**புதுடெல்லி, ஜூன் 28-**

நாடு முழுவதும் பல்வேறு வங்கிகளின் 700 கிளைகளில், 8.5 லட்சம் போலி வங்கிக்கணக்குகள் தொடங்கி, சைபர் குற்றவாளிகள் பயன்படுத்தியதை சி.பி.ஐ. கண்டுபிடித்துள்ளது.

அந்த கணக்குகள், முறையான கே.ஒய்.சி. விதிமுறைகளை பின்பற்றாமலும், போலி ஆவணங்களை பயன்படுத்தியும் தொடங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நபருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ தொடங்கப்பட்டுள்ளன. இதற்கு சில வங்கி அதிகாரிகள், இ-மித்ரா முகவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் அந்த சைபர் குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயல்பட்டதும் சி.பி.ஐ.க்கு தெரிய வந்தது.

இந்த கணக்குகள் பெரும்பாலும் ஒருதடவை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. மோசடி பணம் அந்த கணக்குக்கு வந்த சேர்ந்தவுடன், வெவ்வேறு வங்கிக்கணக்குகளுக்கு அப்பணம் பிரித்து அனுப்பப்பட்டு விடுகிறது. அதன்பிறகு, முதலில் தொடங்கிய கணக்கை மூடி விடுகிறார்கள். இதனால், குற்றவாளியை பிடிப்பது சிரமம் ஆகிறது. இந்த முறைகேடு தொடர்பாக சமீபத்தில் ராஜஸ்தான், டெல்லி, அரியானா, உத்தரகாண்ட், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் 42 இடங்களில் சி.பி.ஐ. சோதனை நடத்தியது. இடைத்தரகர்கள், முகவர்கள், வங்கிக்கணக்குதாரர்கள், வங்கி ஊழியர்கள் என 9 பேர் சி.பி.ஐ.யின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டனர். மேலும், முக்கிய ஆவணங்கள், டிஜிட்டல் ஆதாரங்கள், செல்போன்கள், வங்கிக்கணக்கு தொடக்க ஆவணங்கள், பணப்பரிமாற்ற விவரங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.

இதுகுறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.


# தங்கம் விலை தொடர்ந்து சரிவு

**சென்னை, ஜூன் 28-**

ஆபரண தங்கம் விலை நேற்று சற்று குறைந்து விற்பனையானது. தங்கம் விலை இந்த மாத தொடக்கத்தில் இருந்தே தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. கடந்த 3 தினங்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.85-ம், ஒரு பவுன் ரூ.680-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.9 ஆயிரத்து 70-க்கும், ஒரு பவுன் ரூ.72 ஆயிரத்து 560-க்கும் விற்பனையானது.


நேற்று முன்தினம் ஆபரண தங்கம் விலையில் மாற்றமின்றி, ஒரு சவரன் ரூ.72,560க்கும், ஒரு கிராம் ரூ.9,070க்கும் விற்பனையானது. மேலும் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.120-க்கும், ஒரு கிலோ ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் விற்பனையானது. இந்நிலையில் ஆபரண தங்கம் விலை நேற்று சற்று குறைந்து விற்பனையானது. இதன்படி ஒரு கிராம் ரூ.85-ம், ஒரு பவுன் ரூ.680-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.8 ஆயிரத்து 985-க்கும், ஒரு பவுன் ரூ.71 ஆயிரத்து 880-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் 120 ரூபாய்க்கும், ஒரு கிலோ ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




வடமொழி சமஸ்கிருதத்திற்கு முக்கியத்துவம் அளித்து அதிக நிதியை அள்ளிக்கொடுக்கும் இந்திய அரசு, 50,000 ஆண்டுகளுக்கு மூத்த தமிழ்மொழிக்கு எந்த ஒரு முக்கியத்துவமும் அளிப்பதில்லையே ஏன்? அதிகளவில் வரி பங்களிப்பு செய்யும் தமிழ்நாட்டிற்கு இந்திய மத்திய அரசு தரும் தண்டணை இதுவா?

**- சீமான்**




சீக்கியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு காங்கிரஸ் மன்னிப்பு கேட்க வேண்டும். அதேபோல, பீகாரில் பிரச்சாரம் செய்வதற்கு முன்பு, இங்குள்ள மக்களிடம் ராகுல் மன்னிப்பு கேட்க வேண்டும். பீகாரிகள் உழைப்பதற்காக மட்டுமே பிறந்தவர்கள் என்றால், நீங்கள் ஏன் இங்கு வருகிறீர்கள்? தெலங்கானாவில் பிரச்சாரம் செய்து உங்கள் வாக்குகளைப் பெறுங்கள்.

**- பிரசாந்த் கிஷோர்**



விளைபொருள்களுக்கு போதிய விலை கிடைக்காதது உள்ளிட்ட பல வகைகளில் உழவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில் வேளாண் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீருக்கு வரி விதித்து உழவர்களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்கக் கூடாது. அத்தகைய ஆபத்தான திட்டத்தை தொடக்க நிலையிலேயே மத்திய அரசு கைவிட வேண்டும்.

**- அன்புமணி**



தி.மு.க. ஆட்சி முடிவதற்கு இன்னும் பத்து மாதங்களே உள்ள நிலையில், அனைத்து நியாய விலைக் கடைகளையும் ஒரே துறையின்கீழ் கொண்டு வந்து, பணியாளர்களுக்குள் நிலவும் ஊதிய முரண்பாட்டினைக் களைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- ஓ.பன்னீர்செல்வம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில்

# சித்தன்னவாசல் கோடை விழா நிகழ்ச்சிகள்: அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டார்

புதுக்கோட்டை,ஜூன்.28

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலா தலத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவை இணைந்து நடத்திய சித்தன்னவாசல் கோடை விழா நிகழ்ச்சிகளை, அமைச்சர்.எஸ்.ரகுபதிகலெக்டர் மு.அருணா, தலைமையில் (27.06.2025) நேரில் பார்வையிட்டார்.



பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;முதலமைச்சர் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அந்த வகையில், கோடைக் காலங்களில் சுற்றுலா தலங்களில் கோடை விழாக்களை நடத்துதல், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதை ஊக்குவித்தல், பாரம்பரிய கலாச்சார விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 26.06.2025 மற்றும் 27.06.2025 ஆகிய இரண்டு நாட்கள் சித்தன்னவாசல் கோடை விழா - 2025 நடைபெற்று வருகிறது. இரண்டாம் நாளான இன்றையதினம் நடைபெற்ற சித்தன்னவாசல் கோடை விழாவில், வனத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத்துறை, ஆவின், வேளாண்மை - உழவர் நலத்துறை, தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகள் பார்வையிடப்பட்டது. மேலும், ஆண்களுக்கான கபாடி போட்டி மற்றும் சிலம்பாட்டம் ஆகியவை துவக்கி வைத்து, பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் பார்வையிடப்பட்டது.

எனவே, இதுபோன்று நடைபெறும் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு பொதுமக்கள், மாணாக்கர்கள் உள்ளிட்ட அனைவரும், அதிக முக்கியத்துவம் கொடுத்து பாரம்பரியத்தினை பாதுகாத்திட வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர்.அ.அக்பர்அலி, மாவட்ட சுற்றுலா அலுவலர்ரா.கார்த்திக், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்.து.செந்தில்குமார், வட்டாட்சியர்காமராஜு, வட்டார வளர்ச்சி அலுவலர்.வேலு, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், மண்டல துணை வட்டாட்சியர்.ஆ.லட்சுமணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்.சுப்பிரமணியன் மற்றும்சந்திரன், அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம்: தொல்.திருமாவளவன் எம்.பி.தலைமையில் நடைபெற்றது

அரியலூர்,ஜூன்.28

அரியலூர் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தொல்.திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டம், மாவட்ட கலெக்டர்.பொ.இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள். கு.சின்னப்பா,கொ.க.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.தீபக் சிவாச், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், ஒன்றிய அரசின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், அதன் முன்னேற்றம் மற்றும் செயல்பாடுகள், நிதி ஒதுக்கீடு, திட்டங்களின் பயன்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அரசு அலுவலர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா(கிராமின்), தூய்மை பாரத இயக்கம் (கிராமின்), தேசிய கிராம சுயாட்சி திட்டம், முன்மாதிரி திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜல் ஜீவன் மிஷன் இயக்கம், 15-வது தேசிய நிதிக் குழு மானியம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்ய கிராமின் கௌசல்ய யோஜனா, பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் - நகர்ப்புறம்), தூய்மை பாரத இயக்கம் / நகர்ப்புறம், அம்ருட் 2.0, தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம், தேசிய சமூக பாதுகாப்புத் திட்டம், நில அளவை ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டம், பிரதம மந்திரி பாசல் பீமா யோஜனா, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மண் வள அட்டை, பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம், உழவர் கடன் அட்டை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மின்-தேசிய வேளாண் சந்தை, தேசிய நல குழுமம், அனைவருக்கும் கல்வி இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மதிய உணவுத் திட்டம், பிரதான் மந்திரி கவுசல் விகாஷ் யோஜனா, தகவல் தொழில் நுட்பத்துறை டிஜிட்டல் இந்தியா ஒவ்வொரு கிராமத்திற்கும் பொது சேவை மையம்; மூலம் பொது இணைய சேவை வழங்கும் திட்டம், உட்கட்டமைப்பு தொடர்பான பணிகள் நெடுஞ்சாலை, பிரதான் மந்திரி கனிச் ஷேத்ரா கல்யாண் யோஜனா, மாவட்ட தொழில் மையம், சுகம்யா பாரத் அபியான், பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டம், தேசிய கால்நடை இயக்கம் - கால்நடை காப்பீட்டுத் திட்டம், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன், பால்வள மேம்பாட்டுக்கான தேசிய திட்டம், சிறுபான்மையினர் மாணவ/ மாணவியர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் நலம், குழந்தைகள் பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு, கேலோ இந்தியா, வங்கி கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர்.ரவிச்சந்திரன், மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது

திருவாரூர்,ஜூன்.28

திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திருவாரூர் மாவட்ட கலெக்டர்.வ.மோகனச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது.



திருவாரூர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 2025-2026-ஆம் ஆண்டு 2,748 விவசாயிகளுக்கு ரூ.191.76 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மண்டலத்தில் நடப்பு காரீப் 2024-2025 குறுவை பருவத்தில் 173 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இதுவரை சுமார் 93,986 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 21,140 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். ராபி பருவத்தில் 538 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 5,21,603 மெ.டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,31,241 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், நடப்பு கோடை குறுவை பருவத்தில் 157 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இதுவரை சுமார் 55,083 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 10,032 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில், விவசாயிகளின் நில உடைமைப் பதிவுகள் சரிபார்த்தல் முகாம் அனைத்து 555 வருவாய் கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்கள் நில உடைமைப் பதிவுகளை சரிபார்க்க ஒரு பொன்னான வாய்ப்பு. எனவே, விவசாய பெருமக்கள் அனைவரும் தங்களுடைய ஆதார் அட்டை, நிலப்பட்டா மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைப்பேசியினை எடுத்துக் கொண்டு முகாமிற்கு சென்று தங்களுடைய நிலப் பதிவுகளை சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், தற்பொழுது ஏற்கனவே பதிவு செய்த விவசாயிகள் விடுபட்டுள்ள, தனது நில விவரங்களை இணைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 85,095 விவசாயிகள் பதிவு செய்ய இலக்கு பெறப்பட்டு, இதுவரை 54,693 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். Pஆ-முஐளுயுN பயனாளிகளில் 39,941 விவசாயிகள் பதிவு செய்ய இலக்கு பெறப்பட்டு, இதுவரை 31,053 விவசாயிகள் பதிவு செய்துள்ளார்கள். இத்திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற, விவசாயிகள் தங்கள் நில உடமைகளைப் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர். பா.கலைவாணி, முதுநிலை மண்டல மேலாளர் (நுகர்பொருள்) புஹாரி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர். சித்ரா, வருவாய் கோட்டாட்சியர்கள்சௌம்யா (திருவாரூர்), யோகேஸ்வரன் (மன்னார்குடி), வேளாண்மைதுறை இணை இயக்குநர்.பாலசரஸ்வதி, செயற்பொறியாளர் (வெண்ணாறு வடிநில கோட்டம்). ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) .ஹேமா ஹெப்சிபா நிர்மலா உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் நீர்முளை கிராமத்தில் நடந்த

# மக்கள் தொடர்பு முகாமில் 42 பேருக்கு ரூ.14 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவி

## கலெக்டர் ப.ஆகாஷ் வழங்கினார்

நாகப்பட்டினம்,ஜூன்.28

நாகப்பட்டினம் மாவட்டம் நீர்முளை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 42 பேருக்கு ரூ.14 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர்.ப.ஆகாஷ், வழங்கினார் இம்முகாமில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவதுமுதலமைச்சர் , பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி தமிழ்நாடு அரசானது அறிவிக்கும் திட்டங்கள் மற்றும் உதவிகளை பெற அறிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ள பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு சிரமமின்றி தீர்வு காணவும், மக்களை சந்திக்கும் ஒரு நிகழ்ச்சியே இந்த மக்கள் தொடர்பு முகாமாகும். இம்முகாமில்; துறை சார்ந்த பல திட்டங்கள் பற்றி தொடர்புடைய அலுவலர்களே மக்களுக்கு தெரியப்படுத்துகிறார்கள். தற்போது நீர்முளை கிராமம் தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம்; நடத்தப்பட்டு, இந்த முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியான மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படும்.

தமிழ்நாடு அரசின் எண்ணற்ற திட்டங்கள் சரியான நபர்களுக்கு சரியான நேரத்தில் சென்றடைய வேண்டும். அப்படி சென்றடைந்தால் அத்திட்டம் வெற்றிபெற்றதாகும். மேலும், உண்மையான கஷ்டத்தில் இருக்ககூடிய மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்படும். மக்கள் அரசு அலுவலகங்களை நாடி தங்களது தேவைகளை பூர்த்தி செய்த காலம் மாறி அரசு அலுவலர்கள் மக்களை தேடிச்சென்று அவர்களின் தேவைகளை பூர்;த்தி செய்யும் விதமாக தமிழ்நாடு அரசானது மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, உங்களைத் தேடி உங்கள் ஊரில்; போன்ற பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தினை அறிமுகம் செய்து முதல்கட்டமாக நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில், இரண்டாம் கட்டமாக ஊராட்சி பகுதிகளிலும், மூன்றாம் கட்டமாக தொகுதிவாரியாக நடைபெற்றது. தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் இத்திட்டத்தின் மூலம் மக்கள் பயனடைவதைகண்டு நான்காம் கட்டமாக நகராட்சியில் இரண்டு வார்டுகளுக்கு ஒரு முகாமும், பேரூராட்சியில் மூன்று வார்டுகளுக்கு ஒரு முகாமும், கிராம ஊராட்சிகளில் 10,000 மக்கள் தொகைக்கும் ஒரு முகாமும் ஜூலை 15 முதல் ஆரம்பிக்கப்பட்டு செப்டம்பர் மாதம் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை கலெக்டர் பார்வையிட்டு, வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை உட்பட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் அளித்த மனுக்களை பெற்றுக்கொண்டார். பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியான மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படும்.என்றார். இந்நிகழ்ச்சியில் வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர்.எஸ்.திருமால், மாநில ஆத்மாகுழு உறுப்பினர்மகாகுமார், தனி துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) .கார்த்திகேயன், திருக்குவளை வட்டாட்சியர், தலைஞாயிறு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் திரளாக கலந்துக்கொண்டனர்.

# விவசாயிகள் பயன்படுத்தும் நிலத்தடி நீருக்கு வரி விதிப்பு திட்டத்தை உடனடியாக மத்திய அரசு திரும்ப பெற வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

திருவாரூர் ஜூன் 28

விவசாயிகள் பயன்படுத்தும் நிலத்தடி நீருக்கு வரி விதிப்பு திட்டத்தை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பிஎஸ் மாசிலாமணி கேட்டுகொண்டுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது,நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஹெச்.எம். பாட்டீல் நிலத்தடி நீர் எடுப்பை முறைப்படுத்திடும் திட்டத்தை அமலாக்கிட 1600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக நேற்று டெல்லியில் அறிவித்துள்ளார்.நிலத்தடி நீர் கட்டுப்பாடற்ற முறையில் வெளியே எடுத்து பயன் படுத்தப்படுகிறது என இதைக் முறைப்படுத்திடும் முறையில். விவசாயிகள் சாகுபடிக்காக வெளியே எடுக்கும் நீரை அளவீடு செய்து விவசாயிகளுக்கு தண்ட(னை)வரி விதித்திடவும்.மாநில அரசுகளோடு இணைந்து இத்திட்டத்தை அமலாக்கிட 1600 கோடி ரூபாய் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்துள்ளார்.பல்வேறு வழிகளில் ஒன்றிய அரசு தன் கஜானாவை நிரப்பிட வரியும்,கட்டணமும் விதிக்கப்படுவதுடன்.இருக்கிற சலுகைகளையும் பறித்து வருகிற நிலையில் மீண்டும் விவசாயிகளுக்கு எதிராக ஒரு தாக்குதலை கொடுத்திருக்கிறது.நெல்,கரும்பு உள்ளிட்ட வேளாண்மை உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதால் தான் உணவு தேவையில் தன்னிறைவு பெற்று வெளிநாட்டிற்கு இந்திய அரசால் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இதனால் அந்நிய செலாவணி வருவாய் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகி நமது நாட்டுக்கு கிடைத்து வருகிறது.நெல் விளைச்சல் நடப்பாண்டு கூடுதலாக இருக்கும் என்ற நிலையில் தான் சேமிப்பில் இருக்கும் அரிசியை எடுத்து எத்தனால் தயாரிக்க ஒன்றிய அரசு முடிவு எடுத்துள்ளது.தமிழகத்தின் நீர் தேவை அண்டை மாநிலங்களை நம்பியே உள்ளது. தமிழகத்திற்கு தேவையான நீர் பங்கீடு பாதகமாக உள்ள நிலையிலும் வேளாண்மை உற்பத்தி பெருகி வருவதற்கு அடிப்படை நிலத்தடி நீர் பயன்பாடாகும்.தேவைக்கு மேல் விவசாயிகள் எவரும் நிலத்தடி நீரை எடுப்பதில்லை. பயன்பாட்டுக்கு மேலாக நீரை எடுத்தாலும்.அதனால் மோட்டார் உள்ளிட்ட மின் சாதன கருவிகள் பழுது பட்டு வீண் செலவு ஏற்படும் என்பது விவசாயிகளுக்கு தெரியும்.நிலத்தடி நீரை மேம்படுத்தி சேமித்திட வேண்டும் என்ற அக்கறை விவசாயிகளுக்கும் இருக்கிறது. ஏனெனில் அந்த நீரை நம்பித்தான் விவசாயிகள் உள்ளனர் என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும். நிலத்தடி நீரை சேமித்திடும் அக்கறை அரசுக்கு உண்மையாகவே இருந்தால்.இருக்கும் நீர்நிலைகளை தூர்வாரிட மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தி கடலுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான டி.எம்.சி. நீரை சேமிக்கும் கலன்களை உருவாக்கிடும் திட்டங்களை வகுத்திட நிதியை ஒதுக்கீடு செய்யாமல் விவசாயிகளையே குறி வைத்து தாக்கிடும் செயலே ஒன்றிய அமைச்சரின் அறிவிப்பாகும். இது வன்மையாக கண்டிக்கத் தக்கது.நீண்ட நெடிய போராட்டங்கள். எண்ணற்ற விவசாயிகளின் இறப்பிற்கு பின் தான் தமிழ்நாட்டில் கட்டணமில்லா வேளாண் மின்சாரம் அமல்படுத்தப்படுகிறது. இதையும் துண்டித்திடவே ஒன்றிய அரசின் முன்னேற்பாடாகும் இது.ஆகவே ஒன்றிய அரசு உடனடியாக இந்த திட்டத்தை திரும்ப பெற வேண்டும். இதை தமிழ்நாட்டில் அமல்படுத்த மாட்டோம் என தமிழக முதல்வர் அறிவித்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று மாவட்ட தலைநகரங்களில் ஒன்றிய அரசின் உத்தரவு நகலை எரிக்கும் போராட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் அறிவித்துக் கொள்கிறோம்.இவ்வாறு சங்கத்தின் பொதுச்செயலாளர் பிஎஸ் மாசிலாமணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், சார் ஆட்சியர் ஹிருத்யா விஜயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டம் புன்னம் ஊராட்சி நடுப்பாளையத்தில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்றதை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.




இந்தியப் பண்பாட்டு அமைப்பு அறக்கட்டளை மற்றும் ஆதிசக்தி சித்தர் ஞான பீடம் சார்பில் நடை பெற்ற விழாவில் மாணவ,மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை கண்ணன் அடிகள் வழங்கினார். ஹரிபிரகாஷ், சங்கீதா, சிவகுமார், லட்சுமி, பாரத் கல்லூரி புனிதா கணேசன், செழியன், தென்காசி ஸ்வாமிகள், மஹாலக்ஷ்மி கண்ணன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திருவாரூர் அருகே

# அரசு மேல்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருவாரூர் ஜூன் 28

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26ந்தேதியன்று சர்வதேச போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான தினமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.அந்த தினத்தையட்டி திருவாரூர் ஒளிரவன் பவுண்டேசன் மற்றும் புதூர்அரசு மேல்நிலைப் பள்ளி ஜெ.ஆர்.சி அமைப்பு ஆகியவை இணைந்து நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பட்டது.பள்ளி தலைமையாசிரியர் இராஜரெத்தினம் தலைமையுரையாற்றினார்.பள்ளி போதைப் பொருள் விழிப்புணர்வு மன்ற பொறுப்பாளர் சரவணன் முன்னிலை வகித்தார்.கருத்தாளர்களாக ஒளிரவன் பவுண்டேசன் நிறுவனர் குணசேகரன் புகையிலையின் அடங்கியுள்ள நச்சுப் பொருட்கள் விலக்கி அதன் பாதிப்புகளை எடுத்துரைத்தார்.மேலும் போதைப் பொருட்கள் பயன்படுத்தாமல் ஆரோக்கியமாக வாழ்விற்கு உடற்பயிற்சி யோகப் பயிற்சி மேற்கொள்ள வலியுறுத்தி புகையிலை எந்த வடிவத்தில் உபயோகத்தாலும் ஒரு உயிர் கொள்ளியே இதை செய்கின்ற அனைவருமே சட்டத்தின் முன் குற்றவாளிகளே என்றார்.

மாவட்ட காவல்துறை மது விலக்கு அமலாக்க பிரிவு தலைமை காவலர் வினோத், மஹாராஜா சில்க்ஸ் மேலாளர் சீதாகோபாலன், பள்ளியின் ஜெ.ஆர்.சி கவுன்சிலர் ரேகா மற்றும் பள்ளியின் 9 முதல் 12 வகுப்பு வரை உள்ள 230 மாணவர்கள் கலந்து கொண்டனர்.பின்னர் போதைப் பொருள் விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

# திருச்சி மாநகராட்சியின் ஆணையராக லி.மதுபாலன் பொறுப்பேற்றார்



திருச்சி,ஜூன்.28

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையராகபணியாற்றிய லி.மதுபாலனை, திருச்சி மாநகராட்சி ஆணையராக பணி மாறுதல் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. அரசு உத்தரவின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்தில் (27.06.2025) ஆணையராக பொறுப்பேற்றுள்ளார். புதியதாக பொறுப்பேற்ற ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகர மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும், பொதுமக்களின் குறைகளை தீர்க்கவும் முன்னுரிமை கொடுத்து பணியாற்றுவேன் என தெரிவித்துள்ளார். முன்னதாக மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் புதிதாக பொறுப்பேற்ற ஆணையரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்

## புதிய கலெக்டர் ச.அருண்ராஜ் பேட்டி



பெரம்பலூர்,ஜூன்.28

பெரம்பலூர் மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்த கிரேஸ் பச்சாவ் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் அரசு கூடுதல் செயலாளராக பணியிடம் மாற்றம் செய்யப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்திற்குச.அருண்ராஜ் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய ஆட்சித்தலைவராக ச.அருண்ராஜ் (27.06.2025) கலெக்டர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.பெரம்பலூர் மாவட்ட முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் இஆ.ப., தனது பொறுப்புகளை புதிய மாவட்டகலெக்டர்.ச.அருண்ராஜிடம் ஒப்படைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர்.ச.அருண்ராஜ்,செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:பெரம்பலூர் மாவட்டத்தை நல்ல வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன். குறிப்பாக சமூக நலத்துறை, மருத்துவத்துறை, கல்வித் துறை உள்ளிட்ட அரசின் அனைத்து துறைகளின் திட்டங்களை பொதுமக்களுக்கு நேரடியாக கொண்டு சேர்வதற்கான சீரிய முயற்சியை கண்டிப்பாக மேற்கொள்வேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆட்சியராக பணியாற்றிய அனுபவம் மற்றும் இதர அரசு துறைகளில் திட்டங்களை செயல்படுத்திய அனுபவத்தை கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

அனைத்து திட்டங்களும் மக்களுக்கு நேரடியாக சென்றடையும் வகையில் பணியாற்றுவேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். பெரம்பலூரில் பணியாற்றவுள்ளதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.இவ்வாறு தெரிவித்தார்.இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஸ் பசேரா மாவட்ட வருவாய் அலுவலர். மு. வடிவேல் பிரபு மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் மாவட்ட ஆட்சியருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

<u>மயிலாடுதுறை வட்டம் மணக்குடி கிராமத்தில்</u>

# ரூ.24 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வரும் பணி

## கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் செய்தியாளர்களுடன் சென்று ஆய்வு



மயிலாடுதுறை. ஜன்28.

மயிலாடுதுறை வட்டம் மணக்குடி கிராமத்தில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதை கலெக்டர் . ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் செய்தியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு, கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

இவ்வாய்வில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

மயிலாடுதுறை வட்டத்தில் மணக்குடி கிராமத்தில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் 5183 சதுர.மீ.பரப்பளவில் மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. பேருந்து நிலையமானது 28 பேருந்துகள் நிற்கும் வகையிலும், 49 கடைகள், 10 பயணிகள் காத்திருக்கும் இடம், பொருட்கள் வைப்பறை 1, உணவகங்கள் 2, தாய்மார்கள் பாலூட்டும் அறைகள் 2, முன்பதிவு நிலையம் 1, நேரம் காப்பாளர் 2, காவல்துறை அறை 1, கட்டுப்பாட்டு அறை 1, நவீன வசதிகளுடன் கூடிய 32 இலவச கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகள் கழிப்பறைகள் 2 ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது.

மிக விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. மேலும், முடிவுறாத பணிகளை தரமானதாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும் என பொறியாளரிடம் அறிவுறுத்தியுள்ளேன் என கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் வீரமுத்துகுமார், நகராட்சி ஆணையர் (பொ) .சித்ரா ஆகியோர் உடன் இருந்தனர்

# மகளிருக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில் ராயபுரம் மண்டலத்தில் இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்

சென்னை,ஜூன்.28

மேயர் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இதற்கென உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, (Standard Operating Procedure) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தையல் பயிற்சி, எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள் மற்றும் கணினிப் பயிற்சிகள் (Tally) உள்ளிட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இலவசமாக வழங்கிட ஏதுவாக, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மையம் அமைத்திட மண்டலம் ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்து, மேயர் ஆர்.பிரியா சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை 15 மண்டலங்களிலும் தொடங்கி வைக்கும் விதமாக, இன்று (27.06.2025) இராயபுரம் மண்டலம், வார்டு-51, பழைய வண்ணாரப்பேட்டை, கல்லறை சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினைத் திறந்து வைத்து, முதற்கட்டமாக தையல் பயிற்சி பெறும் மகளிருக்கு தையல் பயிற்சிக்கான பொருட்களின் தொகுப்பினை வழங்கினார். ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள பயிற்சி மையங்களில் 115 பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தினமும் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இந்தப் பயிற்சி வகுப்பில் துணிகளை சரியான முறையில் வெட்டுதல் மற்றும் தைத்தல், ஆரி மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் 40 தையல் இயந்திரங்கள் வரை வழங்கப்பட்டு, 5 அனுபவமிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது.

இதன் அடுத்தக் கட்டமாக இம்மையங்களில் கணினிப் பயிற்சியும், அழகுக் கலைப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர்ஐ ட்ரீம் ஆர்.மூர்த்தி, யது ணை மேயர்மு.மகேஷ் கு மார், ஆணையாளர்ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) எம்.பிரதிவிராஜ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம்த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர்பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் நிரஞ்ஜனா ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**C.M.P.No.13/2025**

விஜயகுமார், த/பெ. சுந்தரமூர்த்தி
114, கீழத்தெரு,
காரிக்கோட்டை, செருமங்கலம்,
மன்னார்குடி Tk.,
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்,
வட்டாட்சியர்அலுவலகம்
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரரின் சகோதரர் சசிகுமார் என்பவர் கடந்த 08.09.2016 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

K.சிவசுந்தர் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**C.M.P.No.53/2025**

பன்னீர்செல்வம்,
த/பெ. தங்கவேல்,
82,தர்காஸ்,கட்டக்குடி,
பேரையூர்–4, மன்னார்குடி Tk.,
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்,
வட்டாட்சியர்அலுவலகம்
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரரின் தந்தை தங்கவேல் என்பவர் கடந்த 21.02.2006 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

K.சிவசுந்தர் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**C.M.P.No.54/2025**

பன்னீர்செல்வம்,
த/பெ. தங்கவேல்,
82,தர்காஸ்,கட்டக்குடி,
பேரையூர்–4, மன்னார்குடி Tk.,
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்,
வட்டாட்சியர்அலுவலகம்
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரரின் தாயார் தனபாக்கியம் என்பவர் கடந்த 30.04.2003 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

K.சிவசுந்தர் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### சார்பு நீதிமன்றம், திருவாரூர்
**E.P.No:93/2022inA.C.P.No:27/2019**

ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட், திருவாரூர் கிளைக்காக அதன் பொது அதிகாரம் பெற்ற முகவர் சுபாஷ்
–மனுதாரர்

–எதிர்–

பாலசுப்ரமணியன்,
த/பெ. கோவிந்தசாமி,
தில்லைவிளாகம், குன்னலூர் Po.,
திருத்துறைப்பூண்டி Tk.,
–எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மேற்படி நிறைவேற்று மனுவில் மேற்படி எதிர்மனுதாரருக்கு பலமுறை நீதிமன்றதிலிருந்து நோட்டீஸ் நோட்டீஸ் அனுப்பியும் சர்வ் ஆகாத காரணத்தினால் நாளிதழில் அறிவிப்பு செய்ய உத்தரவாகி 30.06.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகாவிடில் மேற்படி எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக வழக்கு முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்

M.இளஞ்சேரன்
K.மஞ்சுளா இளஞ்சேரன்
வழக்கறிஞர்கள், மன்னார்குடி

### கூட்டுறவே! நாட்டுயர்வு !!
### TY.SPL 87 செட்டிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
### செட்டிகுளம் அஞ்சல், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 1/2025 தேதி 27.06.2025**

TY.SPL.87 செட்டிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் பின்வரும் பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகல் மட்டும் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | உத்தேச ஒப்பந்த மதிப்பீடுத் தொகை | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | ஒப்பந்தக் காரர் தகுதி | ஒப்பந்த படிவம் விலை |
|---|---|---|---|---|---|
| 1. | TY.SPL.87 செட்டிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க WLGSP திட்டத்தின் 100MT சேமிப்பு கிடங்கு கட்டுதல் | ரூ.30.00,000/– | ரூ. 30,000/– | நான்காம் வகுப்பு அதற்கு மேலும் | ரூ. 1000/– |

குறிப்பு:

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சங்க அலுவலக நேரத்தில் (காலை 9.00 மணி முதல் மாலை 56.00 மணி முடிய) பெற்றுக்கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 09.07.2025 அன்று பிற்பகல் 5.00 மணி வரை பெறப்படும்.
3. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 10.07.2025 அன்று முற்பகல் 10.00 மணியளவில் செயலாட்சியர் அவர்களால் திறக்கப்படும்.
4. ஒப்பந்தக்காரர் தகுதி மற்றும் பிற விதிமுறைகள் போன்றவை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**செயலாட்சியர்,**
**TY.SPL.87 செட்டிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்**

### கூட்டுறவே! நாட்டுயர்வு !!
### R560 நூத்தப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
### நூத்தப்பூர் அஞ்சல், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 1/2025 தேதி 27.06.2025**

R.560 நூத்தப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் பின்வரும் பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகல் மட்டும் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | உத்தேச ஒப்பந்த மதிப்பீடுத் தொகை | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | ஒப்பந்தக் காரர் தகுதி | ஒப்பந்த படிவம் விலை |
|---|---|---|---|---|---|
| 1. | R.560 நூத்தப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க WLGSP திட்டத்தின் 100MT சேமிப்பு கிடங்கு கட்டுதல் | ரூ.30.00,000/– | ரூ. 30,000/– | நான்காம் வகுப்பு அதற்கு மேலும் | ரூ. 1000/– |

குறிப்பு:

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சங்க அலுவலக நேரத்தில் (காலை 9.00 மணி முதல் மாலை 56.00 மணி முடிய) பெற்றுக்கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 09.07.2025 அன்று பிற்பகல் 5.00 மணி வரை பெறப்படும்.
3. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 10.07.2025 அன்று முற்பகல் 10.00 மணியளவில் செயலாட்சியர் அவர்களால் திறக்கப்படும்.
4. ஒப்பந்தக்காரர் தகுதி மற்றும் பிற விதிமுறைகள் போன்றவை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**செயலாட்சியர்,**
**R.560 நூத்தப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்.**

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**C.M.P.No.104/2025**

முஹமது அஜிவாத்,
த/பெ. முகமது சாலிகு,
135,மேலதெரு, கட்டக்குடி,
பேரையூர்–4, மன்னார்குடி Tk.,
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்,
வட்டாட்சியர்அலுவலகம்
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரரின் தாயார் ஹைரு நிஷா என்பவர் கடந்த 17.06.2003 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

K.சிவசுந்தர் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**C.M.P.No.105/2025**

முஹமது அஜிவாத்,
த/பெ. முகமது சாலிகு,
135,மேலதெரு, கட்டக்குடி,
பேரையூர்–4, மன்னார்குடி Tk.,
திருவாரூர் Dt. மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர்,
வட்டாட்சியர்அலுவலகம்
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரரின் தகப்பனார் முகமது சாலிகு என்பவர் கடந்த 05.08.2001 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

K.சிவசுந்தர் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

### வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி
**சி.ப.எண் 3082/2025**

சுகுணாதேவி,
க/பெ.சின்னசாமி,
6/68, அழகாப்பட்டி,
எம்.புதுப்பட்டி ஊராட்சி,
முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்

– எதிர் –

வட்டாட்சியர், முசிறி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது கணவர் "சின்னசாமி" என்பவர் கடந்த 15.12.1999–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

சுகுணாதேவி,
மனுதாரர், முசிறி.

### வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி
**சி.ப.எண் 1109/2025**

P.மருதை,
த/பெ.பெரியசாமி,
மாங்கரைப்பேட்டை,
முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்

– எதிர் –

வட்டாட்சியர், முசிறி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது சித்தப்பா "சங்கிலி" என்பவர் கடந்த 24.11.2014–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

பெ.மருதை,
மனுதாரர், முசிறி.

### நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல், எண்.5/76, மெயின் ரோடு "சந்தன்" நகை அடகு கடையில் 02.01.2021 முதல் 30.12.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.1941/2025/A-4 உத்தரவுப்படி 16.07.2025 மதியம் 2.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

### நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, மங்கைநல்லூர் எண்.4/49 மெயின் ரோடு "ஸ்ரீஏழுமலையான்" நகை அடகு கடையில் 21.08.2020 முதல் 301.12.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை மயிலாடுதுறை RDO அவர்களின் KDIS.No.1080/2025/B-1 உத்தரவுப்படி 23.07.2025 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

### பெயர் மாற்றம்

**I R. Ananthi wife of Prabhakaran residing at No.49/6, Mariyayee Nagar, Velakanatham Road, Musiri Town and Taluk, Trichy District stating that my name is R. Ananthi which is mentioned in my Aadhar Card No.6325 7010 6644 and in my Pancard No.AUUPA7416J and in my Bank account also my name is mentioned as R.Ananthi. But in my School Transfer Certificate my name is R.Ananthy is are all one and the same to that effect I am publishing the same.**

**My Address :**
**R. Ananthi W/o Prabhakaran**
**No.49/6, Mariyayee Nagar, Velakanatham Road,**
**Musiri Town and Taluk, Trichy District.**
**Cell: 94433 98832.**

### ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter. I, **ARTHI .I,** D/o. **IYYAPPAN .U,** Aged 22 Permanently residing at **4/663, Thattankovil Main Road, Mazhavarayanallur, Thiruvanduthurai Post., Mannargudi TK, Thiruvarur Dt. - 614 717** intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.Those who have any valid Objections may notify the same to the Bar Council within 10 days.

**ARTHI .I**

### புகழூர் நகராட்சி, கரூர் மாவட்டம்

ந.க.எண்.347/2025/இ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 24.06.2025

கீழ்க்காணும் பணிகள் செய்ய தகுதியான பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (இரு உறைமுறை) / நேரடியாக மின்னணு முறை மூலம் அல்லது மின்னனுவில் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| பணிகளின் பெயர் |
|---|
| 1. 15வது நிதிகுழு மானியம் 2024–2025. மதிப்பீட்டு தொகை ரூ.350.00 இலட்சம். புகழூர் நகராட்சிக்குட்பட்ட வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி. மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்): 350.00; வைப்புத் தொகை ரூ: மதிப்பீட்டு தொகையில் 1% ரூ.350000/-; ஒப்பந்தாரர் தகுதி: முதல் வகுப்பு; பணி முடிக்க வேண்டிய காலம்: 12 மாதங்கள் |
| 2. 6வது மாநில நிதிக்குழு 2023–2024. மதிப்பீட்டு தொகை ரூ.150.00 இலட்சம். புகழூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08, ஆர்.எஸ்.ரோடு புகழி முருகன் கோவில் எதிர்புறம் வணிக வளாகம் அமைத்தல் பணி. மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்): 105.00; வைப்புத் தொகை ரூ: மதிப்பீட்டு தொகையில் 1% ரூ.105000/-; ஒப்பந்தாரர் தகுதி: முதல் வகுப்பு; பணி முடிக்க வேண்டிய காலம்: 12 மாதங்கள் |
| 1. ஒப்பந்தப்புள்ளி https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 25.07.2025 மாலை 3.00 வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2. முன் வைப்புத் தொகை மதிப்பீட்டுத் தொகையில் 1% வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். 3. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமான கூடுதல் விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். |
| 4. முக்கிய தேதிகள்: i) முன்மாதிரி கலந்தாய்வு கூட்ட நாள்: 18.07.2025 முற்பகல் 11.00 மணி; ii) ஒப்பந்த படிவங்கள் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம்: 25.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை; iii) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் (E-Tender): 25.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை; iv) ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 25.07.2025 பிற்பகல் 3.30 மணி (தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி) |
| 5. டெண்டர் டேவணித் தொகை வங்கி வரை வோலையாக ஆணையாளர் புகழூர் நகராட்சி என்ற பெயரில் வேலாயுதம்பாளையம் கிளையில் மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும். 6. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் எதிர்பாராத விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாளில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அதே தேதி மற்றும் நேரங்களில் திறக்கப்படும். |

செ.ம.தொ.இ / 3312 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — ஆணையாளர், புகழூர் நகராட்சி

## இந்திய அணிக்கு பின்னடைவு:
# 2-வது டெஸ்டில் இருந்து ஜஸ்ப்ரிட் பும்ரா விலகல்?



**பர்மிங்காம், ஜூன் 28-**

2-வது டெஸ்ட் போட்டியில் ஜஸ்பிரித் பும்ரா விளையாட மாட்டார் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

**இங்கி. முன்னிலை...**

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லீட்சில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது போட்டி பர்மிங்காமில் ஜூலை 2-ம் தேதி தொடங்க உள்ளது.

**பின்னடைவு...**

இந்நிலையில் 2-வது டெஸ்ட் போட்டியில் ஜஸ்பிரித் பும்ரா விளையாட மாட்டார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இது இந்திய அணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளராக பும்ரா இருந்தார். முதல் இன்னிங்சில் அவர் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். 2-வது இன்னிங்சில் விக்கெட் ஏதும் எடுக்கவில்லை. அதே சமயம் அவர் அதிக ஓவர்களையும் அவர் வீசினார்.

**ஓய்வு...**

இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் 5 போட்டிகளிலும் விளையாட முடியாது என முன்பே அறிவிக்கப்பட்டது. மூன்று போட்டிகளில் தான் அவர் விளையாடுவார் என பி.சி.சி.ஐ.யும் முன்பே தெரிவித்திருந்தது. எனவே அந்த இரண்டு போட்டிகளிலும் அடுத்தடுத்து விளையாடுவது அவருக்கு அதிக பணிச்சுமையை ஏற்படுத்தும் என்பதால் 2-வது போட்டியின் போது அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறது. லாட்ஸ் மைதானத்தில் நடைபெறும் 3-வது டெஸ்ட் போட்டியின் போது இந்திய அணியில் பும்ரா விளையாடுவார் எனக் கூறப்படுகிறது.

## ஐ.சி.சி. அதிரடி முடிவு:
# 3 வடிவிலான போட்டிகளிலும் புதிய விதிமுறைகள் அறிமுகம்

**துபாய், ஜூன் 28-**

3 வடிவிலான போட்டிகளிலும் தற்போதுள்ள விதிகளில் கணிசமான மாற்றங்களை ஐ.சி.சி. கொண்டு வந்துள்ளது.

**அதிரடி முடிவு...**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.), 3 வடிவிலான போட்டிகளிலும் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) சில புதிய விதிமுறைகளை கொண்டு வந்துள்ளது. அதுபோக சில விதிமுறைகளில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. ஐ.சி.சி.-ன் இந்த அதிரடி முடிவு ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

**கட்டாயமில்லை...**

அதன்படி, பந்தின் மீது எச்சில் பயன்படுத்துவதற்கு தடை உள்ளது. ஆனால் பந்தின் மீது எச்சில் பயன்படுத்தப்பட்டது அறியப்பட்டால் பந்தை மாற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் இவ்வாறு செய்தால் தண்டனையாக பேட்டிங் அணிக்கு 5 ரன் வழங்கப்படும் நடைமுறை தொடரும். அதே சமயம் பந்தின் தன்மை மோசமாக சேதமடைந்திருந்தால் மட்டுமே நடுவர்கள் பந்தை மாற்றுவார்கள்.

**காலுறையில் பட்டாலும்...**

முன்னதாக விக்கெட் கீப்பர் பந்தை கேட்ச் செய்ததை எதிர்த்து ஒரு பேட்ஸ்மேன் அப்பீல் செய்யும்போது பந்து பேட்டில் பட்டதா? இல்லையா? என்பது 'அல்ட்ரா எட்ஜ்' தொழில்நுட்பம் மூலம் கண்டறியப்படும். இனி வரும் காலங்களில் பந்து காலுறையில் உரசியதால் அது எல்.பி.டபிள்யூ. முறையில் விக்கெட்டாக இருக்குமா? என்பதையும் 3-வது நடுவர் சோதிப்பார்.

**தனியாக ரிவ்யூ...**

சில நேரங்களில் பீல்டர்கள் தெளிவான கேட்ச் பிடிக்காமல் வேண்டுமென்றே விக்கெட்டை கேட்பார்கள். அது போன்ற சூழ்நிலையில் கேட்ச் தெளிவாக இல்லையென்று கண்டறிந்தால் நடுவர் அதை நோ-பால் என்று அறிவிப்பார். ஒரு பந்தில் ஒரு பேட்ஸ்மேன் எல்.பி.டபிள்யூ. மற்றும் ரன் அவுட்டாகிறார் என்றால் அந்த இரண்டையும் தனியாக ரிவ்யூ எடுக்கலாம். ஆனால் முதலில் எல்.பி.டபிள்யூ. என்று தெரிய வந்தால் அது டெட் பால் என்று முடிவெடுக்கப்பட்டு விக்கெட் வழங்கப்படும். ரன் அவுட் சோதிக்கப்பட மாட்டாது.

**கூடுதல் ரன்...**

இனிமேல் நோ-பால் என்றாலும் கேட்ச் சோதிக்கப்படும். அது சரியான கேட்ச் என்றால், நோ-பாலுக்குரிய எக்ஸ்டிரா ஒரு ரன் எப்போதும் போல் வழங்கப்படும். ஆனால் அது துல்லியமான கேட்ச் இல்லை என்று தெரியவந்தால், அந்த சமயத்தில் பேட்ஸ்மேன் ஓடியிருந்தால் அதற்குரிய ரன்னும் சேர்த்து வழங்கப்படும்.

# தோல்விக்காக ஆஸ்திரேலியாவுக்கு பரிசு கொடுக்க முடிவு செய்தோம்
## ரோகித் சர்மா வெளிப்படை

**மும்பை, ஜூன் 28-**

ஐ.சி.சி. தொடரில் ஆஸ்திரேலிய அணி உடனான பலப்பரீட்சை குறித்து இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா பேசியுள்ளார்.

**ஆஸி.சாம்பியன் ...**

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி 2023 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி, 2023 உலகக் கோப்பை இறுதிப் போட்டி, 2024 டி20 உலகக் கோப்பை, 2025 சாம்பியன்ஸ் டிராபி அரையிறுதியில் ஆஸ்திரேலியா உடன் விளையாடி உள்ளது. இதில் 2023-ல் இரண்டு இறுதிப் போட்டியிலும் இந்தியா தோல்வியை தழுவியது. அதுவும் இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்தியா தோல்வியை தழுவியது. அந்த ஆண்டு நவம்பர் 19-ம் தேதி நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற பைனலில் 6 விக்கெட்டுகளில் ஆஸி. வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

**பாழாக்கியது...**

"ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நமது ஒருநாள் உலகக் கோப்பை கனவை பாழாக்கியது. அதனால் நாமும் அவர்களுக்கு சிறந்த பரிசு கொடுக்க வேண்டுமென என முடிவு செய்தோம். இது போன்ற பேச்சு டிரெஸ்ஸிங் ரூமில் நடக்கும். 2024 டி20 உலகக் கோப்பை தொடரில் ஆஸி. உடனான ஆட்டத்தில் வெற்றி பெற்றால் அவர்கள் இந்த தொடரை விட்டு வெளியேறுவார்கள் என்பதை எங்களது மனதில் வைத்தோம். அந்த ஆட்டத்தில் நான் சிறப்பாக பேட் செய்ய வேண்டுமென நினைத்தேன். எப்படியாவது ரன் சேர்க்க வேண்டுமென முடிவு செய்தேன். அவர்களது எதிராக சிறப்பாக செயல்பட விரும்பினேன். அதனால் ஒவ்வொரு ஆஸ்திரேலிய பவுலரையும் அட்டாக் செய்து விளையாடவே பார்த்தேன்" என தற்போது ரோகித் தெரிவித்துள்ளார்.

**இந்தியா வெற்றி...**

கடந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடரில் ரோகித் தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. அந்த தொடரில் சூப்பர் 8 சுற்று ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 41 பந்துகளில் 92 ரன்கள் சேர்த்தார் ரோகித். 8 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளை அவர் விளாசி இருந்தார். அந்த ஆட்டத்தில் அவரது ஸ்ட்ரைக் ரேட் 224.39. இந்திய 24 ரன்களில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இதே போல இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா பட்டம் வென்றது. இதில் அரையிறுதி ஆட்டத்தில் 4 விக்கெட்டுகளில் ஆஸ்திரேலிய அணியை இந்தியா வீழ்த்தி இருந்தது.

# தன்னுடைய முக்கியத்துவத்தை சிராஜ் உணர வேண்டும்: அஸ்வின்

**சென்னை, ஜூன் 28-**

அணியில் தன்னுடைய முக்கியத்துவத்தை சிராஜ் உணர வேண்டும் என்று அஸ்வின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முகமது சிராஜ் விக்கெட் எடுக்காவிட்டாலும் பரவாயில்லை ரன்களை வழங்க கூடாது என்று இந்திய முன்னாள் வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் அறிவுரை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "சிராஜிடம் என்னுடைய ஒரே கேள்வி என்னவெனில் உங்களால் ரன்கள் கொடுப்பதை குறைக்க முடியாதா? நீங்கள் விக்கெட்டுகளை கூட எடுக்க வேண்டாம். ஆனால் நீங்கள் ஓவருக்கு 4 - 5 ரன்களை கொடுப்பதால் பும்ராவை மீண்டும் பவுலிங் செய்ய வைக்க வேண்டியுள்ளது. பும்ராவால் எத்தனை அணைகளைக் கட்ட முடியும்? அவரையும் எதிரணியினர் சமாளித்து களைப்படைய வைக்கிறார்கள்.

சிராஜ் அணியில் தன்னுடைய முக்கியத்துவத்தை உணர வேண்டும். மோர்னே மோர்கல் 20 ஓவரில் 2/43 என்ற வகையில் பவுலிங் செய்தது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? அதே போலத்தான் சிராஜ் செய்ய வேண்டும். எனவே நீங்கள் 58 ரன்களை கொடுத்து 2 விக்கெட்டுகள் எடுத்தாலும் பரவாயில்லை என்று கூறினார்.

# அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் விடுவிப்பு: இ.பி.எஸ். அறிவிப்பு

**சென்னை, ஜூன் 28-**

அ.தி.மு.க.விலிருந்து கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் டி. ஜாண்தங்கத்தை விடுவித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு; கன்னியாகுமரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் டி. ஜாண்தங்கம் மற்றும் திருவட்டார் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் ஆர். ஜெயசுதர்ஷன் இருவரும் அவரவர் வகித்து வரும் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பில் ஆர்.ஜெயசுதர்ஷன் ( கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சக முன்னாள் தலைவர்) நியமிக்கப்படுகிறார். கழக உடன்பிறப்புகள் இவருக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடக் கேட்டுக்கொள்கிறேன்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜிம்பாப்வே - தெ.ஆப்பிரிக்கா டெஸ்ட்



**ந**டப்பு உலக டெஸ்ட் சாம்பியனான தென் ஆப்பிரிக்க அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது .இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி புலவாயோவில் இன்று தொடங்க உள்ளது. தென் ஆப்பிரிக்க டெஸ்ட் அணியின் வழக்கமான கேப்டனான டெம்பா பவுமா காயம் காரணமாக இந்த தொடரிலிருந்து விலகியுள்ளார்.

எனவே இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணியின் புதிய கேப்டனாக கேஷவ் மகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். ஜிம்பாப்வே அணியின் கேப்டனாக கிரேக் எர்வின் செயல்பட உள்ளார். இந்திய நேரப்படி இன்று மதியம் 1.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது .

# பேட் கம்மின்ஸ் புதிய சாதனை

**மு**தல் டெஸ்ட்டில் டாஸ் வென்ற ஆஸி. பேட்டிங் தேர்வு செய்து 180 ரன்களுக்கு முதல் இன்னிங்ஸில் ஆல் அவுட்டாக, அடுத்து விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 190 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இரண்டாவது இன்னிங்ஸை ஆஸி. அணி விளையாடி வருகிறது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். கேப்டனாக கம்மின்ஸ் 139 விக்கெட்டுகளை நிறைவு செய்துள்ளார். இதன்மூலம், கேப்டனாக அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் உலக அளவில் 2-ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆஸி. நாட்டைச் சேர்ந்தவர்களில் கம்மின்ஸ் முதலிடம் பிடித்துள்ளார். இதற்கு முன்பாக ஆஸி. வீரர் ரிச்சி பெனௌட் கேப்டனாக 138 விக்கெட்டுகள் எடுத்திருந்தார். கேப்டனாக அதிக டெஸ்ட் விக்கெட் எடுத்தவர்கள்: இம்ரான் கான் - 187 (பாகிஸ்தான்), பாட் கம்மின்ஸ் - 139 (ஆஸி.), ரிச்சர்ட் பெனௌட் - 138 (ஆஸி.), கேரி சோபர்ஸ் - 117 (மே.இ.தீ.), டேனியல் வெட்டோரி - 116 (நியூசி.),

# மே.இ. வீரருக்கு அபராதம்

**மு**தல் டெஸ்ட்டில் டாஸ் வென்ற ஆஸி. பேட்டிங் தேர்வு செய்து 180 ரன்களுக்கு முதல் இன்னிங்ஸில் ஆல் அவுட்டாக, அடுத்து விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 190 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இரண்டாவது இன்னிங்ஸை ஆஸி. அணி விளையாடி வருகிறது. இந்தப் போட்டியில், முதல் இன்னிங்ஸில் பாட் கம்மின்ஸ் விக்கட்டை வீழ்த்திய மே.இ.தீ. அணி வீரர் ஜெய்டென் சீல்ஸ் கிளம்பு என்பதுபோல சைகை காண்பிப்பார்.

ஐ.சி.சி. நடத்தை விதிமுறையின்படி ஜெய்டென் சீல்ஸுக்கு போட்டிக்கான ஊதியத்திலிருந்து 15 சதவிகிதம் அபராதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் இன்னிங்ஸில் ஜெய்டென் சீல்ஸ் 5 விக்கெட்டுகள் எடுத்து அசத்தியதும் குறிப்பிடத்தக்கது. இது குறித்து சீல்ஸ் பேசியதாவது: ன் எதையும் குறிப்பிட்டு அப்படி செய்யவில்லை. அது விரக்தியில் வெளியாகிய ஒரு சைகை. பாட் கம்மின்ஸ் சில நல்ல ஷாட்டுகளை ஆடினார். நான் ஓய்வறை அங்கிருக்கிறது என்பதைத்தான் காட்டினேன் எனக் கூறினார். கடந்த 2 ஆண்டுகளில் இது 2-ஆவது முறை என்பதால் அவருக்கு 2 தகுதி இழப்புப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

# அரையிறுதியில் யூகி பாம்ப்ரி

**ஆ**ண்களுக்கான சர்வதேச ஏ.டி.பி. டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடக்கிறது. இதில் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி- அமெரிக்காவின் ராபர்ட் காலோவே ஜோடி, பிரேசிலின் ரபேல் மடோஸ், மார்செலோ மெலோ ஜோடியை ஜோடியை சந்தித்தது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய யூகி பாம்ப்ரி 6-2, 6-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

# மான்செஸ்டர் அபார வெற்றி

**கி**ளப் அணிகளுக்கான 21-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் 'நாக்-அவுட்' சுற்றுக்கு முன்னேறும்.

இந்த நிலையில், நேற்று 'ஜி' பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி(இங்கிலாந்து ) - யுவென்டஸ் (இத்தாலி ) அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய மான்செஸ்டர் சிட்டி அணி 5-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

# ஒப்பந்தத்தை நீட்டித்த ரொனால்டோ

**உ**லகின் நட்சத்திர கால்பந்து வீரராக திகழ்பவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த இவர், சவுதி அரேபியாவின் அல்-நாசர் அணிக்காக விளையாடி வருகிறார். ரொனால்டோவின் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில், மேலும் இரண்டு வருடத்திற்கு நீட்டித்துள்ளார். இதனால் 42 வயது வரை கால்பந்து விளையாடி இன்னும் பல்வேறு சாதனைகள் படைக்க இருக்கிறார்.

இது தொடர்பாக ரொனால்டோ தனது சமூக வலைத்தளத்தில் "புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. அதே பேரார்வம், அதே கனவு. இணைந்து சதனைப் படைப்போம்" எனத் தெரிவித்துள்ளார். ஐந்து முறை பலோன் டிஆர் விருது வென்ற ரொனால்டோ, கடந்த 2022ஆம் ஆண்டு இறுதியில் அல்-நாசர் அணிக்கு சென்றார். இவருக்கு வருடத்திற்கு 20 கோடி அமெரிக்க டாலர் சம்பளமாக வழங்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்:
# இ.பி.எஸ் தேர்தல் சுற்றுப்பயணம் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 28-**

தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றனர். நடிகர் விஜய்யின் த.வெ.க.வும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடவுள்ளதால் போட்டி வலுத்துள்ளது. நடிகர் விஜய்யும் வரும் ஆக.15 ஆம் தேதி முதல் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வரும் ஜூலை 7 ஆம் தேதி முதல் சுற்றுப்பயணத்தை



தொடங்குகிறார். மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் சுற்றுப்பயணத்தை தொடங்குகிறார். முதல்கட்டமாக தொகுதிவாரியாக ஜூலை 7-ம் தேதி முதல் ஜூலை 21-ம் தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இ.பி.எஸ்., கோவையில் தொடங்கும் பயணத்தை தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் நிறைவு செய்கிறார்.

### இ.பி.எஸ். சுற்றுப்பயண விவரம்:

| | |
|---|---|
| 1) 07.07.2025 | மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம். |
| 2) 8.07.2025 | கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு. |
| 3) 10.07.2025 | விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம். |
| 4) 11.07.2025 | வானூர், மயிலம், செஞ்சி. |
| 5) 12.07.2025 | கடலூர், பண்ருட்டி, நெய்வேலி. |
| 6) 14.07.2025 | குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம். |
| 7) 15.07.2025 | சீர்காழி, பூம்புகார், மயிலாடுதுறை |
| 8) 16.07.2025 | நன்னிலம், திருவாரூர், கீழ்வேளூர் |
| 9) 17.07.2025 | நாகப்பட்டினம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி |
| 10) 18.07.2025 | மன்னார்குடி, திருவிடைமருதூர், கும்பகோணம். |
| 11) 19.07.2025 | பாபநாசம், தஞ்சாவூர், திருவையாறு |
| 12) 21.07.2025 | ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி. |

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# புதுச்சேரி ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் ராஜினாமா ஏற்பு
## முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூன் 28-**

புதுச்சேரி ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பதவியை சாய் ஜெ சரவணன் குமார் திடீரென ராஜினாமா செய்துள்ளார். அவரது ராஜினாமாவை முதல்வர் ரங்கசாமி ஏற்றுக்கொண்டார்.

புதுச்சேரியில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சராக இருந்து வந்தவர் சாய் ஜெ சரவணன் குமார். இவர் ஊசுடு தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ., வாக வெற்றி பெற்றார். பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான இவருக்கு புதுவை சட்டப்பேரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இந்த நிலையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பதிவியை சாய் ஜெ சரவணன் குமார் திடீரென ராஜினாமா செய்துள்ளார். இதுகுறித்து, அவர் ஒரு விளக்கம் அளித்துள்ளார். அதில், பா.ஜ.க. தலைமை உத்தரவிட்டதன் பேரில், தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததாக தெரிவித்துள்ளார். இது புதுவை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. என்.ஆர். காங்கிரஸ் உடன் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி புதுச்சேரியில் நடைபெறும் நிலையில் அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில் முதல்வர் ரங்கசாமி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்துப் பேசினார். பின்னர், செய்தியாளர்களுடன் பேசிய அவர், அமைச்சர் சாய் சரவணன் குமார் கொடுத்த ராஜினாமா கடிதம் ஆளுநரிடம் கொடுக்கப்பட்டதாகவும், இந்தக் கடிதம் ஏற்கப்பட்டதாகவும், அமைச்சரின் ராஜினாமாவும் ஏற்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அடுத்த அமைச்சர் யார் என்பது இதுவரை முடிவாகவில்லை என முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.

# போதைப் பொருள் வழக்கில் ஜாமின் கோரி நடிகர் கிருஷ்ணா மனு தாக்கல்

**சென்னை, ஜூன் 28-**

நடிகர் கிருஷ்ணா ஜாமின் கோரி சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அ.தி.மு.க. ஐடி பிரிவு முன்னாள் நிர்வாகியான பிரசாத்துக்கு போதைப்பொருள் சப்ளை செய்ததாக பிரதீப் என்பவரை கடந்த சில நாட்களுக்கு முன்பு போலீசார் கைது செய்தனர். அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், பிரபல நடிகரான ஸ்ரீகாந்த் போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

இதையடுத்து, கழுகு படத்தில் நடித்து பிரபலமான நடிகர் கிருஷ்ணாவுக்கும் போதைப்பொருள் வழக்கில் தொடர்பு இருப்பதாக பரபரப்பான தகவல்கள் வெளியானதை அடுத்து, நடிகர் கிருஷ்ணாவை போலீசார் கைது செய்தனர். போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகர் கிருஷ்ணாவை 14 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, நடிகர் கிருஷ்ணா, கெவினை ஜூலை 10ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க எழும்பூர் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். மருத்துவ பரிசோதனை முடிந்து நடிகர் கிருஷ்ணா, கெவின் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எழும்பூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகர் கிருஷ்ணா ஜாமின் கோரி சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

# பிளஸ்-1 தேர்வு மறுமதிப்பீடு பட்டியல் 30-ம் தேதி வெளியீடு

**சென்னை, ஜூன் 28-**

பிளஸ்-1 தேர்வு மறுமதிப்பீடு பட்டியல் வரும் 30-ம் தேதி வெளியிடப்படம் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் , நடைபெற்று முடிந்த மார்ச் 2025, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி எழுதி, விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் நோடிபிகேஷன் என்ற பகுதியில் 30.06.2025 (திங்கட்கிழமை) அன்று பிற்பகல் முதல் வெளியிடப்படவுள்ளது. இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாள்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுகூட்டல் / மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும், உடன் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# தமிழகத்தில் ஜூலை 3 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு
## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, ஜூன் 28-**

வரும் 3-ம் தேதி வரை தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

29-ம் தேதி முதல் 3-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 1-ம் தேதி வரை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. எனினும், ஓரிரு இடங்களில் சற்று உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 38-39 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவகங்கை மாவட்ட கலெக்டராக பொற்கொடி பொறுப்பேற்றார்



**சிவகங்கை, ஜூன் 28-**

சிவகங்கை மாவட்ட கலெக்டராக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார் பொற்கொடி. இவர் இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிபாக்கத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 2011-ம் ஆண்டு திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்தவர்.

2013-ம் ஆண்டு விழுப்புரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலராக பணிபுரிந்தார். 2014-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டு வாரிய செயலர் மாவட்ட வருவாய் அலுவலர்) ஆக பணிபுரிந்தவர். 2019-ஆம் ஆண்டு அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்தவர். 2021-ம் ஆண்டு சென்னையில் ஆவின் பொது மேலாளர் (நிர்வாகம்) ஆக பணிபுரிந்தவர். 2023-ம் ஆண்டு சென்னையில் துணை ஆணையர், (கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்) ஆக பணிபுரிந்தவர். 2024-ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணிக்கான பதவி உயர்வு பெற்றவர். ஜுலை 2024 முதல் இணை மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை) ஆக பணிபுரிந்ததை தொடர்ந்து.சிவகங்கை மாவட்டத்தில், புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக கா.பொற்கொடி, பொறுப்பேற்றுக் கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்று, தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அரசின் பல்வேறு துறைகளின் சார்பில், அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கின்ற ஒவ்வொரு திட்டமும், சாமானிய மக்களுக்கும் கிடைக்கப் பெறச் செய்யும் வகையில், மாவட்ட கலெக்டர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அதற்கான உரிய கள ஆய்வுகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்கள். தமிழ்நாடு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்படும் அனைத்து நலத்திட்டங்களும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தகுதியான எந்த ஒரு பயனாளியும் விடுபடாமல், அனைத்து அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும் வண்ணம், மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அனைத்துத் துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து, முனைப்புடன் பணியாற்றுவதற்கான சிறப்பான நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் என கலெக்டர் பொற்கொடி, தெரிவித்தார்.

# தொழிற்சங்கங்களின் சார்பில் தெருமுனைப் பிரச்சாரம்



**பரமக்குடி, ஜூன் 28-**

தொழில் சங்கங்களின் சார்பில் வருகின்ற ஜூலை 9ஆம் தேதி இந்திய பொது வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளது. இது தொடர்பான விளக்க தெருமுனைப் பிரச்சாரம் பரமக்குடியில் நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஏ.ஐ.டி.யு.சி. அலுவலகம் முன்பு துவங்கி பெரிய பஜார், முத்தாலம்மன் கோவில், ஆற்றுப்பாலம், 5 முனை ரோடு, பேருந்து நிலையம், சின்ன கடை தெரு ஆகிய பகுதிகளில் நடைபெற்று.

இறுதியாக எமனேஸ்வரத்தில் நிறைவடைந்தது. இப்பிரச்சார நிகழ்வில் ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கத்தின் சார்பில் மாவட்ட பொதுச் செயலாளர் ராஜன், கைத்தறி சங்கத்தின் சார்பில் சுப்பிரமணியன், சிவக்குமார், போக்குவரத்து சங்கத்தின் சார்பில் செல்வராஜ், சுப்பிரமணியன், குமரேசன்,எல்.பி.எப் சார்பில் கைத்தறி பிரிவு சேதுராமன், இ.எம்.ஆர்.சுப்பிரமணியன், சி.பி.ஐ.நகர துணைச்செயலாளர் எம்.கோட்டைச்சாமி,கே.எம். ஜானகிராமன், எஸ்.பி.ராமநாதன், டாஸ்மாக் சங்கத்தின் சார்பில் இ.கலைஞர், எம்.மனோகரன் மற்றும் திரளாக நிர்வாகிகள் பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.

# அரியூர் கிராமத்தில் அய்யனார் சுவாமி கோவில் கும்பாபிஷேக விழா



**அலங்காநல்லூர், ஜூன் 28-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே ஆரியூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கொந்திகுளம் அய்யனார் சுவாமி கோவில் வீடு, கிடைமாட்டுத் தொழுவம் உள்ளிட்ட பரிவார தெய்வங்களின் ஆலய மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இரண்டு கால யாக பூஜைகளை தொடர்ந்து சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி ராமேஸ்வரம், அழகர்கோவில், உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வானத்தில் கருடன் வட்டமிட மேல தாளம் முழங்க புனித நிர் ஊற்றபட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து சுவாமிகளுக்கு அபிஷேகமும், தீபாரதனைகளும் நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் முப்பெரும் துறை அமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.பி. உதயகுமார் கலந்து கொண்டார்.

பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை அரியூர் கொந்திகுளம் அய்யனார் சுவாமி கும்பிடும் பங்காளிகள் மற்றும் கிராமபொதுமக்கள் செய்திருந்தனர்.

# நத்தம் அருகே அனுமதியின்றி விற்கப்பட்ட மதுபாட்டில்கள் பறிமுதல்

**நத்தம், ஜூன் 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் அரசு அனுமதி இன்றி மது விற்பனை நடப்பதாக நத்தம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீஸ்-இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட போலீசார்கள் நத்தம் சுற்று வட்டார கிராம பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது குட்டூர் பிரிவு அருகே புன்னபப்பட்டியை சேர்ந்த கண்ணன் (வயது 48) என்பவர் தனது பெட்டிக்கடையில் வைத்து அனுமதியின்றி மது பாட்டில்கள் விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து 46 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர்.



திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதி கிழக்கு ஒன்றியம் சிறுமலை ஊராட்சிக்கு உட்பட்ட, அண்ணாநகர், பழையூர், புதூர் தாழை கடை தென்மலை பகுதிகளில் பூத்கமிட்டி அமைக்கும் பணியை கட்சி துணை பொதுச்செயலாளர் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான நத்தம் விசுவநாதன் ஆலோசனையின் படி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.முருகன் தலைமையில் ஆய்வு நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், ஒன்றிய துணை செயலாளர் கணிராஜன், ஒன்றிய, மாவட்ட பிரதிநிதி முருகராஜ், ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் முனிசாமி மற்றும் சிறுமலை பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க மாவட்ட மகளிரணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம்

## மாவட்டச்செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பங்கேற்பு



**திருமங்கலம், ஜூன் 28-**

தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.க. கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வில் புதிதாக பொறுப்பேற்றுள்ள ஒன்றிய, நகர,பகுதி,பேரூர் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. மதுரை தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர், சேடபட்டி மு. மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

இதையடுத்து மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வில் புதிதாக பொறுப்பேற்றுள்ள ஒன்றிய, நகர,பகுதி,பேரூர் கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி சார்பில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புடன் கழகப் பணியாற்றிட வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் பெரியசாமி, தனபால்,சண்முகம்,தங்கபாண்டியன்,மதன்குமார், நாகராஜன், செல்வ பிரகாஷ் மற்றும் பகுதி உசிலை சிவா,காளிதாஸ், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரமிளா மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர,பகுதி,பேரூர் உள்ளிட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் ரயில் நிலையம் 2024-2025 நிதியாண்டில் சாதனை

**திருமங்கலம், ஜூன் 28-**

2024-2025-ம் நிதியாண்டில் மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலுள்ள ரயில் நிலையம் டிக்கெட் விற்பனை மற்றும் முன்பதிவின் மூலம் ரூ.2.54 கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

தெற்கு ரயில்வே,மதுரை ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட ரயில் நிலையங்கள் கடந்த 2024-2025-ம் நிதியாண்டில் ஈட்டியுள்ள வருவாய் விபரங்களை அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டதை தொடர்ந்து மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகம் அண்மையில் வெளியிட்டது.அதன்படி மதுரை ரயில்வே கோட்டத்திலுள்ள 134 ரயில் நிலையங்களில் அதிக வருவாய் ஈட்டிய முதல் மூன்று இடங்களை முறையே மதுரை ஜங்ஷன் ரூ.223கோடி,திருநெல்வேலி ஜங்ஷன் ரூ.148கோடி,திண்டுக்கல் ஜங்ஷன் ரூ.53கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் தற்போது வருவாய் ஈட்டலில் முன்னேற்றம் அடைந்துள்ள திருமங்கலம் ரயில் நிலையம் இந்த நிதியாண்டில் முன்பதிவு மற்றும் டிக்கெட் விற்பனையின் மூலம் ரூ.2.54கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

மேலும் கடந்த நிதியாண்டில் நாள்தோறும் 1349 பயணிகள் திருமங்கலம் ரயில் நிலையத்தின் மூலம் பயணம் மேற்கொண்டு உள்ளனர். போதிய ரயில்கள் நின்று செல்லாத நிலையிலும் அதிக அளவில் வருவாய் ஈட்டியுள்ள திருமங்கலம் ரயில்வே நிலையத்தில் கூடுதலாக சில ரயில்களை நின்று சென்றிட ரயில்வே நிர்வாகம் அனுமதியளித்தால் மென்மேலும் கூடுதல் வருவாய் கிடைத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே திருமங்கலம் ரயில் நிலையத்தில் கூடுதலாக சில ரயில்கள் நின்று சென்றிட தெற்கு ரயில்வே நிர்வாகம் அனுமதி வழங்கிட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

# சாலை விபத்தில் தந்தையை இழந்த குழந்தைகளுக்கு விபத்து காப்பீடு நிதி



**மானாமதுரை, ஜூன் 28-**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களின் வருமானம் ஈட்டும் தந்தை அல்லது தாயார் விபத்தில் இறந்து விட்டால் அவர்களின் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் கல்வியை தொடர தமிழ்நாடு அரசு விபத்து காப்பீடு நிதியுதவி திட்டம் நடைமுறையில் உள்ளது.

இதன் படி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக்கோட்டை அரசு நிதியுதவி பெறும் எம்.கே.என். நடுநிலைப் பள்ளியில் பயின்று வரும் மதிபாலன்,வர்ஷினி இவர்களின் தந்தை பாலமுருகன் சாலை விபத்தில் மரணமடைந்தார்.

அவரின் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் கல்வி தடைபடாமல் இருக்க பள்ளி மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பள்ளி தொடக்க கல்வி துறை சார்பில் விண்ணப்பம் பரிசீலனை செய்து, தற்போது இரண்டு குழந்தைகளுக்கும் தலா ரூ. 75,000 க்கான நிரந்தர வைப்பு தொகைக்கான பத்திரத்தை குழந்தைகள் மற்றும் பாதுகாவலர் பஞ்சவர்ணத்திடம் மானாமதுரை வட்டார கல்வி அலுவலர் அஸ்மிதா பானு வழங்கினார்.

உடன் பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் உடனிருந்தார். இந்த நிரந்தர வைப்பு தொகை வட்டி மூலம் கல்வி பயிலவும், கல்லூரி உயர்கல்வி காலத்தில் முதலீடு பணமாக மாணவர்கள் வங்கி கணக்கில் வரவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அருப்புக்கோட்டையில் ஆதிசேஷ வாராஹி அம்மன் கோவிலுக்கு நடிகை திரிஷா இயந்திர யானை வழங்கினார்



**அருப்புக்கோட்டை, ஜூன் 28-**

அருப்புக்கோட்டை வீரலட்சுமி நகரில் ஸ்ரீ அஷ்டலிங்க ஆதிசேஷ செல்வ விநாயகர் திருக்கோவில் மற்றும் ஸ்ரீ ஆதிசேஷ வாராஹி அம்மன் கோவில் உள்ளது.

வீரலட்சுமி நகரில் ஸ்ரீ அஷ்ட லிங்க ஆதிசேஷ செல்வ விநாயகர் திருக்கோவில் மற்றும் ஸ்ரீ ஆதிசேஷ வாராஹி அம்மன் கோவிலுக்கு வனவிலங்குகளை பாதுகாக்கும் விதமாகவும், கோவில்களில் யானைகள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் வகையிலும், கோவில்களில் யானைகள் பக்தர்களை தாக்கி உயிரிழப்புகள் ஏற்படுவதை தடுக்கும் வகையிலும் மேலும் அதே நேரத்தில் பக்தியை வளர்க்கும் விதமாகவும் நடிகை திரிஷா கிருஷ்ணன் (திரிஷா மேலாளர்) மற்றும் பீப்பிள் பார் கேட்டில் இன் இந்தியா இணைந்து அன்பளிப்பாக ரூபாய் 6 லட்சம் மதிப்பில் கஜா என்ற இயந்திர யானை வழங்கப்பட்டுள்ளது.

இந்த யானை 800 கிலோ எடையில் கேரளாவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திர யானை சக்கரங்கள் மூலம் வீதி உலா செல்லும் வகையிலும் தன் காதுகள், துதிக்கைகள், தலை அனைத்தும் அசையும் வகையில் பக்தர்கள் மீது தண்ணீரை பீச்சி அடிக்கும் வகையில் தத்ரூபமாக உண்மையான யானை போன்றே உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திர யானை அறிமுக விழா நிகழ்ச்சியில் உதவி காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், நகர் காவல் ஆய்வாளர் பாலமுருகன் கலந்து கொண்டு புதிய யானையை அறிமுகம் செய்து வைத்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அறிமுகமான நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் தொழிலாளி மாயம்

**நத்தம், ஜூன் 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்- அண்ணாநகரை சேர்ந்தவர் ஷேக்பாட்ஷா(42). தொழிலாளி.இவருக்கும், இவரது மனைவிக்கும் அடிக்கடி குடும்பத்திற்குள் தகராறு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த 20-ம் தேதி கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் கோபமடைந்த ஷேக்பாட்ஷா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு சென்று விட்டார். தொடர்ந்து பல இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் பெற்றோர் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. இது குறித்து அவரது மனைவி நத்தம் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான தொழிலாளியை தேடி வருகின்றனர்



**தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் பயனாளிகளுக்கு பணியிட விபத்து மரண உதவித்தொகையை மாவட்ட கலெக்டர் ரஞ்சீத் சிங் வழங்கினார்.**

# அழகர் கோவில் உண்டியல் திறப்பு

**மேலூர், ஜூன் 28-**

மேலூர் அருகே உள்ள அழகர் கோவில் கள்ளழகர் கோவிலில் நேற்று உண்டியல் திறக்கப்பட்டது. இதில் கோவிலின் துணை ஆணையரும் செயல் அலுவலரும் யக்ஞ நாராயணன், மதுரை கூடலழகர் பெருமாள் கோவில் உதவி ஆணையர் பிரதீபா , ஆய்வர் சாவித்திரி கோவிலின் அறங்காவலர் குழு உறுப்பினர் கள் பாண்டியராஜன், செந்தில்குமார், மீனாட்சி பிரியாந்த், அறங்காவலர் குழு தலைவர் பிரதிநிதி நல்லதம்பி, கோவில் கண்காணிப்பாளர்கள் பாலமுருகன், அருணா தேவி, பி. ஆர். ஓ முருகன் மற்றும் கோவில் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் பக்தர்கள் காணிக்கையாக ரூ. 37,50,637 ரொக்கமும் மற்றும் தங்கம் 26 கிராம், வெள்ளி 195 கிராம் ஆகியன கிடைக்கப்பெற்றன.



● சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று சாகித்திய அகாடமி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், சிறப்புநிலை தமிழ்த்துறை இணைந்து நடத்தும் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம்" தொடக்க விழாவில், "முத்தமிழறிஞர் கலைஞரின் இலக்கிய ஆளுமை" என்ற சிறப்பு மலரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இவ்விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், சாகித்ய அகாடமி செயலாளர் சீனிவாசராவ், கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.11.15 கோடி செலவில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்து முதல்வரின் கல்விச்சோலை வகுப்பறைகள், ஸ்மார்ட் கிளாஸ் வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், கணினி அறை, ஆய்வுக்கூடங்கள், நூலகம் ஆகியவற்றையும் பள்ளியில் ஆசிரியர் பாடம் நடத்துவதையும் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

# எழுத்தாளரை போற்றும்... (1-ம் பக்க தொடர்ச்சி)

இணைந்து பணியாற்ற விரும்புகின்றன. அதனால்தான், மறைந்த முதல்வர் கருணாநிதி ஜே.என்.யு. -வில் தமிழுக்கு ஒரு தனி இருக்கை இருக்க வேண்டும் என்று விரும்பி, அதைச் செயல்படுத்திக் காட்டினார்.

15 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு அந்த இருக்கையை தனி ஒரு துறையாக வளர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறையை உருவாக்க 5 கோடியே 30 லட்சம் ரூபாய் வழங்கினோம். ஜே.என்.யு.வோடு பன்னோக்கு கலையரங்கத்துக்கு அருகே உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாகித்ய அகாடமியும், ஜே.என்.யு.வும் இணைந்து நடத்தும் இந்த விழா மூலமாக மறைந்த முதல்வர் கருணாநிதி இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாளாக இது அமைந்திருக்கிறது. சாகித்ய அகாடமி விருது பெறும் படைப்பாளர்களுக்கும் வீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து மறைந்த முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளன்று, 'கனவு இல்லம்'என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன்.

இந்த திட்டத்தில் இதுவரைக்கும் 15 அறிஞர்களுக்கு தமிழக அரசு கனவு இல்லம் வழங்கி இருக்கிறது. பரிசுத் தொகை ஒரு லட்சம் என்றால், வீட்டின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல்.அதுவும், அந்த வீட்டுக்கான பத்திரச் செலவு முதலானவற்றையும் தமிழக அரசே ஏற்கிறது. கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றவர்களுக்கும் கனவு இல்லம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் இதனை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். இதற்கெல்லாம் ஒரே நோக்கம், படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும் என்பதே தி.மு.க. அரசின் நோக்கம். எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும். இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக மக்களின் உயர்வுக்காக அவர்களின் சமூக விடுதலைக்காக முற்போக்குச் சிந்தனைக்காக இயங்கிய, இயங்கும் எழுத்தாளர்களை தமிழ்ச் சமூகம் உச்சி மோந்து கொண்டாட தவறியதே இல்லை. அந்த வழியில்தான் மறைந்த முதல்வர் கருணாநிதியும் தமிழ் இலக்கியவாதியாக இருந்து, சிறப்பான படைப்புகளைக் கொடுத்தது மட்டுமல்லாமல் சிறப்பான படைப்பாளிகள் அனைவரையும் அங்கீகரித்தார், அரவணைத்தார். அது தான் அவரது தனிச் சிறப்பு.

தமிழ்ச் சமூகத்தில் மறைந்த முதல்வர் கருணாநிதியைப் போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும். படைப்பாற்றல் பெற்றவர்கள் தொடர்ந்து தங்களின் படைப்பை எழுதி வழங்க வேண்டும். சிறந்த படைப்புகளை இதுபோன்ற அமைப்புகள் பாராட்ட வேண்டும். படைப்பாளிகள் அவர்கள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற வேண்டும். இதைத்தான் தமிழக அரசு செய்து வருகிறது. சாகித்ய அகாடமி போன்ற அமைப்புகளும் இந்தப் பணியை தொய்வில்லாமல் தொடர வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கீழ்ப்பாக்கத்தில் ரூ.13.94 கோடியில் புதிய வகுப்பறை கட்டிடங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

காஞ்சிபுரம், ஜூன் 28-


இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் ரூ.13.94 கோடியில் புதிய வகுப்பறை கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியருக்கு கல்வி உபகரணங்கள், மிதிவண்டிகளையும் அவர் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கத்தோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருக்கோயில்கள் சார்பில் கல்வி நிறுவனங்கள், பயிற்சி பள்ளிகள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடங்கள், மனநலக் காப்பகம், மருத்துவ மையங்கள் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகள் மற்றும் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகளில் 22,455 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் இப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு 138.13 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள், கலையரங்கம், விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன.

சென்னை, கீழ்ப்பாக்கத்தில் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் மெட்ரிக்குலேஷன் பள்ளியானது பொருளாதார நெருக்கடியால் திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டிய வாடகையை நீண்ட காலமாக செலுத்த முடியாத சூழலில் பள்ளியை திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு அப்பள்ளியை திருக்கோயில் நிர்வாகமே ஏற்று நடத்திட உத்தரவிட்டதை தொடர்ந்து, 2021-ம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கு ஏற்கனவே 1.66 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இப்பள்ளியில் 981 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை, கீழ்ப்பாக்கத்தில் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 11.15 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டிடம், சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளியில் 2.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும் கூடம், கலையரங்கம், கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டிடத்தை மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். அத்துடன், பள்ளி மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.10,000/-, கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகள் மற்றும் மிதி வண்டிகளையும் வழங்கினார்.



● சென்னையில் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது புகைப்பட கலைஞர் இரா.குட்டி (எ) ஞானசாஸ்தா- ஆ.சுஜி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், எம்.எல்.ஏ.க்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் நா.இளையராஜா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் இ.பி.எஸ்.தான்

## நயினார் நாகேந்திரன் திட்டவட்டம்

திருநெல்வேலி,ஜூன்28-

வரும் சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி தான் என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: தி.மு.க. அரசு நடத்தியது உண்மையான முருகன் மாநாடு கிடையாது.

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள், கடவுளை கல்லாக நினைத்து தூக்கிப் போட்டு உடைப்பவர்கள், மற்ற மதங்களை இழிவாகப் பேசுபவர்கள், முருகன் மாநாடு நடத்தினால் முருகன் எப்படி அவர்கள் பக்கம் போவார்.


இந்து முன்னணி நடத்தியது தான் முழுக்க முழுக்க முருக பக்தர்கள் மாநாடு. இந்து முன்னணி நடத்திய அந்த மாநாட்டில் நாங்கள் கலந்து கொண்டோம்.

இந்த மாநாட்டில் யாரையும் நாங்கள் குறை சொல்லவில்லை. பிற மதங்களையோ, பிறரைப் பற்றியோ புண்படுத்தி பேசவில்லை. எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்கவில்லை.

இதை தேர்தலுக்கான வாக்கு வங்கியாக மாற்றவோ நாங்கள் முயற்சிக்கவில்லை. திருச்செந்தூரில் நடைபெறும் கும்பாபிஷேகம் அனைத்து பக்தர்களுக்கும் பொதுவானது.

அதை வைத்து தி.மு.க. பலனடைய முயற்சிக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் குடும்ப ஆட்சியை மக்கள் நிச்சயமாக திரும்ப அமைக்க விடமாட்டார்கள். குறிப்பாக அடுத்த தலைமுறையினர் விரும்பவில்லை.

தி.மு.க.வுக்கு தேர்தல் பயம் தோல்வி பயம் வந்துவிட்டது. அதனால் ஏதேதோ பேசுகிறார்கள். வரும் சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி தான். கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷாவும், அதி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமியும் பேசித் தீர்ப்பார்கள்,'' என்று அவர் கூறினார்.




● அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அமெரிக்காவின் கான்சாஸ் மாகாணத்தில் அமைந்துள்ள கான்செஸ் மாநில வேளாண் பல்கலைக்கழகத்தில் கான்சாஸ் மாகாண வேளாண் துறை செயலாளர், மாகாணத்தின் ஏற்றுமதி இயக்குநர், பல்கலைக்கழகத்தின் வேளாண்துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து பூச்சி நோய் தாக்குதல் குறித்து கலந்துரையாடினார். உடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன் உடனிருந்தார்.

# பொறியியல் கலந்தாய்வு... (1-ம் பக்க தொடர்ச்சி)

பிரிவினருக்கு கலந்தாய்வு நடைபெறுகிறது. ரேண்டம் எண் வெளியானதைத் தொடர்ந்து ஜூன் 28 முதல் ஜூலை 2-ம் தேதி வரை மாணவர்கள் குறை தீர்க்கும் சேவை வழங்கப்படும். தரவரிசை பட்டியலில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### கடலூரைச் சேர்ந்த....

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் கோவி.செழியன், "பொறியியல் தர வரிசைப் பட்டியலில் 145 பேர் 200க்கு 200 கட் ஆப் எடுத்துள்ளனர். தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை 14 தொடங்கி ஆகஸ்ட் 17ம் தேதி வரை நடைபெறும். சிறப்பு பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 7ம் தேதி தொடங்கும். 7.5 சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் கடலூரைச் சேர்ந்த தரணி என்ற மாணவி முதலிடம் பிடித்துள்ளார். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 51,004 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள் என்று அமைச்சர் கோவி.செழியன் கூறினார். கணினி வசதி இல்லாத கிராமப்புற மாணவர்கள் மாவட்டங்களில் உள்ள உதவி மையங்களுக்கு சென்று கலந்தாய்வில் பங்கேற்கலாம். www.tneaonline.org இணையதளத்தில் மாணவர்கள் தங்களது ரேங்க் மதிப்பெண்களை அறியலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



● சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தின் நிருவாக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழ்ச்சங்கம் இயக்குநர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விருதுநகரில் மினி டைடல் பூங்கா: டெண்டர் கோரியது தமிழக அரசு

விருதுநகர், ஜூன் 28-

விருதுநகரில் மினி டைடல் பூங்கா அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் டைடல் பூங்காவானது பல்வேறு மாவட்டங்களில் திறக்கப்படுகிறது.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான கட்டுமான பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு டெண்டர் கோரி உள்ளது.

தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்டதாக இந்த மினி டைடல் பூங்கா அமைய உள்ளது.

இந்த டைடல் பூங்கா மூலம் சுமார் 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். 12 மாதங்களில் இந்த கட்டுமான பணிகளை முடிக்க டைடல் பூங்கா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மினி டைடல் பூங்கா கட்டிடத்தில் தலா 500 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் அங்கேயே பணிபுரியும் வகையில் குளிர்சாதன வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு மற்றும் கட்டிட மேலாண்மை வசதிகள், மின் விளக்குகளுடன் கூடிய உட்புற சாலை வசதிகள், 24 X 7 பாதுகாப்பு வசதிகள் , உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

இந்த நிலையில் விருதுநகரில் மினி டைடல் பூங்கா அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. வரைப்படம், வடிவமைப்பு தயார் செய்வதற்கான ஆலோசகர்களை தேர்வு செய்யவும் டெண்டர் கோரியது.

தமிழ்நாடு பட்ஜெட்டில் அறிவித்தபடி விருதுநகரில் மினி டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளது.